விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து **Registered as a News paper in Sri Lanka**

# வலம்புரி
# VALAMPURI

திருமணப் பட்டுப்
புடைவைகளின் ராசியான
ஸ்தாபனம்
ரவி அன் ராஜ்
சில்க்ஸ்

77, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்
T.P:- 021-2469

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 28 செவ்வாய்க்கிழமை (11.06.2002) தொலைபேசி 3378 ஒலி 174

## யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் கோஷ்டி மோதல்

# விஞ்ஞான- கலைப்பீட மாணவர்கள் வளாகத்திற்குள் செல்வதற்குத்தடை!

## துணைவேந்தர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாணவர்களிடையே இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து மூன்று பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் பல்கலைக்கழக வளவினுள் பிரவேசிப்பதற்கும் விடுதிகளில் தங்குவதற்கும் நேற்று முதல் மறுஅறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை அறிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணப் பல்லைக்கழகத்தின் விஞ்ஞான, வர்த்தக, முகாமைத்துவ பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று முதல் பல்கலைக் கழக வளவினுள் பிரவேசிப்பதற்கும் விடுதிகளில் தங்குவதற்கும் மறு அறிவித்தல் வரை தடைவிதிக்கப் பட்டுள்ளது.

இம்மாணவர்களின் தடை தொடர்பாக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலை, விஞ்ஞான, வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதிகள், பதிவாளர், விடுதிக் காப்பாளர்கள், சிரேஷ்ட மாணவ ஆலோசகர், பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர், உதவிப் பதிவாளர் (நலச்சேவை) ஆகியோருக்கு அறிவித்தல்களை வழங்கியுள்ளார்.

இதேவேளை பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் மற்றும் மருத்துவ பீடம், விவசாய பீடம், இராமநாதன்

(10ம் பக்கம் பார்க்க)

## பிரபாவை ஒப்படைக்குமாறு ரணிலிடம் கோரவேண்டும்!

### வாழப்பாடி ஜெயாவுக்குக் கடிதம்

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் ஒப்படைப்பது குறித்து முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதா இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் பேச்சு நடத்த வேண்டுமென்று இந்திரா காங்கிரஸ் மூத்த தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கோரிக்கை விடுத்துள்ளார்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இந்தியாவில் தங்கியிருப்பதால் புலிகளின் தலைவரைக் கைது செய்வது குறித்து பேசவேண்டுமென்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு, வாழப்பாடி இராமமூர்த்தி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில் முதலமைச்சர் பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைப்பது குறித்து பிரதமர் ரணில்

(10ம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. ஜெகதீஸ்வரனை கைது செய்ய.நீதிபதி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பி அமைப்பிடம் உள்ள ஆயுதங்கள் தொடர்பான விபரப் பட்டியலுடன் அவ்வமைப்பின் யாழ் மாவட்டப் பிரதி அமைப்பாளர் க.மணிபல்லவராஜனை மன்றில் ஆஜராகுமாறு யாழ் நீதிமன்றம் உத்தரவிட்ட போதும் அவர் நேற்று மன்றில் ஆஜராகவில்லை.

கொழும்பில் தமது கட்சியின் உயர் மட்ட மாநாடு ஒன்று இடம் பெறவுள்ளதால் அம்மாநாட்டில் கலந்து கொள்ள கொழும்பு செல்வதால், ஆயுதம் தொடர்பான விபரங்களுடன் நீதிமன்றுக்கு ஆஜராக முடியாதிருப்பதாகவும் அதனை வேறு ஓர் தவணைக்கு மாற்றித் தரும் படியும் மணிபல்லவராஜன் நீதி மன்றுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இதேவேளை ஈ.பி.டி.பி அமைப்பைச் சேர்ந்த க.ஜெகதீஸ்வரனை (ஜெகன்) மன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்ட போதும் அவர் நேற்று நீதி மன்றில் ஆஜராகாததால் அவரை

(10ம் பக்கம் பார்க்க)

## தனியார் தொலைபேசி நிலையத்தை மாணவர்கள் அடித்து நொருக்கினர்

### நிலைமை மோசமடைகிறது பாதுகாப்புக் கடமையில் பொலிஸார்

(கல்வியங்காடு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீட மாணவர்களுக்கும் கலை, வர்த்தக, முகாமைத்துவ பீட மாணவர்களுக்குமிடையே கடந்த சில தினங்களாக இடம்பெற்று வரும் மோதல்களை அடுத்து நேற்றைய தினம் பல்கலைக்கழகத்தின் நுழைவாயில் அமைந்துள்ள இராமநாதன் வீதியில் இருக்கும்

இதற்குப் பழிவாங்கும் முகமாக கலை, வர்த்தக முகாமைத்துவ பீட மாணவர்கள் விஞ்ஞான பீடத்திற்குள் நுழைந்து மாணவர் பொது அறை மற்றும் மாணவர்களின் துவிச்சக்கர வண்டிகள் என்பவற்றை அடித்து நொருக்கினர். இதன் போது

(10ம் பக்கம் பார்க்க)

### யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்ட

## வன்னிப் பகுதி மீன்கள்

மன்றில் ஆஜராகவில்லை.

கொழும்பில் தமது கட்சியின் உயர் மட்ட மாநாடு ஒன்று இடம் பெறவுள்ளதால் அம்மாநாட்டில் கலந்து கொள்ள கொழும்பு செல்

சேர்ந்த க.ஜெகதீஸ்வரனை (ஜெகன்) மன்றில் ஆஜராகுமாறு உத்தரவி டப்பட்ட போதும் அவர் நேற்று நீதி மன்றில் ஆஜராகாததால் அவரை

(10ம் பக்கம் பார்க்க)

# புலிகள் தீவகம் செல்வதில் தடை இவ்வாரத்திற்குள் தீர்வு

(கொழும்பு)

தீவுப் பகுதிகளில் தமிழீழ விடு தலைப் புலிகள் அரசியல் பணிக ளில் ஈடுபடுவதில் காணப்படும் சிக் கல்களுக்கு இந்தவார இறுதிக்குள் தீர்வு காணப்பட்டு விடுமென யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தீவுப்பகுதி களில் தமது அரசியல் பணிமனை களைத் திறந்து அரசியல் பணிக ளில் ஈடுபடுவதில் காணப்படும் இழு பறி நிலைக்கு விரைவில் ஒரு முடிவு கட்டுவதுடன் இது தொடர் பாக இருதரப்பு உடன்பாடுகள் பற்றி அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கிடையில் பயணிகள் படகுச்சேவையை நடத்துவது குறித்து விடுதலைப் புலிகள் முன்வைத் துள்ள கோரிக்கை தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (த)

கடந்த சில தினங்களாக இடம்பெற்று வரும் மோதல்களை அடுத்து நேற் றைய தினம் பல்கலைக்கழகத் தின் நுழைவாயில் அமைந்துள்ள இராமநாதன் வீதியில் இருக்கும் "ஞானம்" தொலைத்தொடர்பு நிலை யம் நேற்று மாணவர்களால் அடித்து நொருக்கப்பட்டது.

பிரஸ்தாப தொலைத்தொடர்பு நிலையம் கலைப்பீட மாணவர் ஒரு வருக்குச் சொந்தமானது எனவும் இதனை விஞ்ஞான பீட மாணவர் களே அடித்து நொருக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 7ம் திகதி விஞ்ஞான பீட மாணவர்கள் ஆண்கள் விடுதிக்குள் நுழைந்து கண்ணாடி மற்றும் குறித்த மாணவர் ஒருவரின் அறை என்ப வற்றை அடித்து நொருக்கினர்.

# வன்னிப் பகுதி மீன்கள் திருப்பி அனுப்பப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வன்னிப் பகுதியில் இருந்து யாழ் குடாநாட்டிற்கு நேற்று கொண்டுவ ரப்பட்ட மீன்கள் வடமாகாண கடற் தொழிலாளர் சமாசத்தினால் திருப்பி அனுப்பப்பட்டது.

யாழ் குடாநாட்டு மீனவர்கள் சுதந் திரமாக மீன் பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்று கோரி போராட்டத் தில் ஈடுபட்டு வரும் இவ்வேளையில் வன்னியில் இருந்து மீன் கொண்டு வந்து குடாநாட்டில் விற்பனை செய் வது போராட்டதில் ஈடுபடும் மீனவர் களின் மனங்களைப் புண்படுத்தும் என்பதாலேயே அவை திருப்பி அனுப பப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை குடாநாட்டு மீனவர் களின் போராட்டம் வெற்றி பெற் றால் வன்னியில் இருந்து வரும் மீன்களும் சந்தைப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-43)

# சக்கோட்டையில் மீண்டும் படையினரின் முகாம்

## பதுங்கு குழிகளும் அமைப்பு

(மந்திகை)

வடமராட்சி வடக்கு சக்கோட்டைப் பகுதிகளில் உள்ள தனியார் வீடுக ளில் இருந்து வெளியேறிய படை யினர் மீண்டும் அப்பகுதிகளில் முகா மிட்டு வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தமது உடைமைகளை வாகனங் களில் ஏற்றிக் கொண்டு பெருமளவு படையினர் அப்பகுதிகளுக்கு வருகை தந்து முகாம் அமைப்பதுடன் கரை யோரப் பகுதிளில் பாதுகாப்பு அரண் கள் மற்றும் ப துங்கு குழிகள் அமைப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை புரிந்துணர்வு ஒப் பந்தம் ஏற்பட்டு சமாதானச் சூழல்

(10ம் பக்கம் பார்க்க)

### பாடசாலைகளில் முகாமிட்டுள்ள

# படையிரை வெளியேறக் கோரி வடமராட்சியில் நேற்று பகிஷ்கரிப்பு

(மந்திகை)

பாடசாலைகளில் இருந்து படை யினர் வெளியேறி மாணவர்கள் சுதந்திரமாக கற்றல் செயற்பாடுக ளில் ஈடுபட வகை செய்யப்படவேண் டும் என்று கோரி நேற்று பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரி, மெத டிஸ்ற் பெண்கள் உயர்தரப் பாட சாலை ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட் டனர்.

இதனால் மேற்படிப் பாடசாலைக ளில் கற்பித்தல், செயற்பாடுகள் எதுவும் இடம்பெறவில்லை.

மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாததால் அதிபர் ஆசிரியர் கள் மற்றும் பாடசாலை ஊழியர் கள் காத்திருந்து விட்டு ஏமாற்றத் துடன் திரும்பிச் சென்றனர்.

இதேவேளை பாடசாலைகளில் இருந்து படையினர் வெளியேறும் வரை தமது போராட்டம் தொடரும் என்று மாணவர் சமூகத்தினர் தெரி வித்துள்ளனர்.

கடந்த மாதம் 23ந் திகதி வடம ராட்சி மாணவர் சமூகம் படையினர் பாடசாலைகளில் இருந்து வெளி யேற வேண்டும் என்று கோரி பகிஷ் கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-23)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### வகுப்புகள்

ஆண்டு 6-11 வரையான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு வகுப்பிலும் 15 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். அனுமதிக்கு; தலைமை ஆசிரியர் விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (5418)

### MATHS, ENGLISH

O/L பரீட்சையில் A B, C பெறுபேறடையவும் ஆண்டு 8, 9, 10 உட்பட ஆங்கிலம் A/L, G A.Q, SPOKEN ENGLISH இருமாதங்களிலும் கற்பிக்கப்படும். அனுபவமுள்ள B.Sc (Cey) 85, சிவன்கோவிலடி, சிவன் கோவில் பின்புறம், திருநெல்வேலி. (5420)


## ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கைக் கடிகாரமொன்று கண்டெடுக்கப்பட்டு பணிப்பாளர் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-5)

## இராசி பலன்

11-06-2002
(வைகாசி 28 செவ்வாய்)
பிரதமை காலை 5 26 வரை
மிருகசீரிடம் பி.இ 1.23 வரை
இராகுகாலம் 2.52 - 4.22
நல்ல நேரம் 10.22 - 11.52

**மேடம்**
நல்ல முயற்சி, போசன சுகம், கலந்துரையாடல், தெய்வதரிசனம்.

**இடபம்**
சகோதரர் உதவி, திடீர் பயணம், சத்துரு ஜெயம், தொழில் முயற்சி.

**மிதுனம்**
தனலாபம், உறவினர் சந்திப்பு, குடும்ப சுகம், தொழில்நன்மை.

**கடகம்**
மாதர் நட்பு, உடல் சோர்வு, காரிய சித்தி, வேலைப்பளு.

**சிங்கம்**
அதிகாரம், தூரதேசச் செய்தி, காரியஅனுகூலம் லட்சுமி கரம்.

**கன்னி**
போசன சுகம், வீண் பிரச்சினை, மனச் சோர்வு, காரிய அலைச்சல்.

**துலாம்**
பிரயாணம், பணவரவு, காரிய வெற்றி, நண்பர்கள் சந்திப்பு,

**விருச்சிகம்**
முயற்சி வெற்றி, மகிழ்ச்சியான நிகழ்வு, உறவினர் சந்திப்பு, கல்விச்சிறப்பு.

**தனுசு**
குடும்பக்கவலை, வியாபார நன்மை, உறவினர் உதவி, முயற்சி தாமதம்.

**மகரம்**
உஷ்ண வியாதி, கல்விச் சிறப்பு, சகோதரர் உதவி, மனச் சஞ்சலம்.

**கும்பம்**
காரிய வெற்றி, கூட்டு முயற்சி, வாக்குமேன்மை, பிதாசிந்தை.

**மீனம்**
பொருள் விரயம், மனக் கிலேசம், பகைவரால் நன்மை ஆரோக்கியம் குறைவு.

(பழையநேரப்படி கணிப்பிடப் பட்டது)


வளவன்

# அன்பு அறிவு நிறைந்த அமரர் துரைராசா

# போலி முத்திரை குத்தப்படாத பெருமகன்


**க. சிவானந்தமூர்த்தி**
சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ். பல்கலைக்கழகம்


*அமரர் துரைராசாவின் எட்டாவதுசிரார்த்த தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.*



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கடந்து வந்த கரடுமுரடான பாதையில் நம்பிக்கை நட்சத்திரமாகப் பிரகாசித்தவர் அமரர் துரைராசா அவர்கள் அவரது ஆறு ஆண்டுக்கு உட்பட்ட துணைவேந்தர் பதவி பல்கலைக் கழகத்தின் நீண்டகால வளர்ச்சிக்கு அத்திபாரம் இட்டது என்பதில் இருவேறு கருத்துக்களிற்கு இடமில்லை பல்கலைக்கழகத்தில் இன்றையபல வளர்ச்சி நிலைகளைப் பின்நோக்கிப் பார்த்தால் அவற்றை அமரர் துரைராசாவுடன் தொடங்கவேண்டியிருப்பது நாம்அறிந்த ஒன்று

காலச் சூழ்நிலைகளைத்தம் சுயலாபத்திற்காகப் பயன்படுத்திப் பல கல்விமான்கள் வெளிநாடு சென்று அங்கெல்லாம் ஈழத்தமிழர் பிரதிநிதிகள் எனப் போலி முத்திரை குத்தி பாதுகாப்பாக வாழ்ந்த போது தன்லாபம் கருதாது குடும்பபாதுகாப்பை எண்ணாது தன்சொந்த மண்ணில் தம் மக்கள் கல்வியின் பிரதிநிதியாக இனங்காட்டி வாழ்ந்து காட்டியவர் அமரர் துரை அவர்கள்.

### பேராசிரியர் இயல்பு

எல்லாருக்கும் நல்லவராக வல்லவராக வாழ்ந்து புன்சிரிப்போடு இளமை மூப்பு கருதாது பதவியில் உயர்வு தாழ்வு காணாது எல்லோரிடமும் அன்பு பாராட்டி மனிதநேயத்துடன் வாழ்ந்த உயர் மானிடன் அவர் துணைவேந்தர் பதவியை கௌரவமான பதவியாகக் கருதாது அதற்குரிய அதிகாரத்தை நேரியவழியில் பயன்படுத்தி எல்லோரையும் ஒன்றாக நடத்தியஉதாரண புரிஷர் ஆவர்.

### வெளியீடுகள்

ஒரு பொறியியல் அறிஞனாக இருந்தும் யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகத் தமிழரின் பழமைக்கும் பெருமைக்கும் துணையாக இருந்தது அவற்றைக் கட்டிக் காத்துப் பேணவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர்.

அதற்குஏற்றவிதத்தில் வெளியீட்டுநிதியம் ஒன்றை ஏற்படுத்தல் எதிர்காலச்சந்ததியினருக்கு பயன்படக்கூடிய பலஆக்கங்களை நூலாகவெளியிட்டு வைத்த பெருமை அவருக்குண்டு. இதற்கு அவர் காலத்தில் வெளிவந்த நூல்களே அவர்மறைந்தும் பல ஆண்டுகள் சென்று அவரை நினைவுபடுத்தும் சான்றுகள்.

அவரிடம் இயல்பாகஇருந்த அன்பு, அறிவு, அடக்கம் எளிமை, நேர்மை இனப்பற்று என்பனவே எல்லோர் மத்தியிலும் அவர் கவர்ச்சிமிக்க பாத்திரமாகத் திகழச்செய்கிறது. அவர் மறைந்துஎட்டுஆண்டுகள் சென்றிருப்பினும் அவர் நினைவு என்றும்நிலைத்திருக்கும்இப்பல்கலைக்கழகவளர்ச்சியில்-வாழ்கஅவர்புகழ் ●

# நாளைய ஹர்த்தாலுக்கு பொதுஅமைப்புக்கள்ஆதரவு

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமுல்படுத்தாததைக் கண்டித்து நாளைநடைபெறவுள்ள பூரணஹர்த்தாலுக்கு குடாநாட்டிலுள்ள சகல பொது அமைப்புக்களும் தமது பூரணஆதரவைத் தெரிவித்து அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

### யாழ் மாவட்ட வி. நு. கூ. சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச்சங்க தலைவர்கள், பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில்பின் வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

● நாளை நடைபெறவுள்ள பூரண ஹர்த்தாலுக்கு முழு ஆதரவு வழங்குவதுடன், புரிந்துணர்வு உடன்படிக்கையின் சகல ஏற்பாடுகளையும் அரசும், ஆயுதப் படையினரும் முழுமையாக அமுல் செய்ய வேண்டும்

● தொடரும் மீனவர் போராட்டத்திற்கு முழுமையான ஆதரவு தெரிவிப்பதுடன் அரசு இவ் விடயத்தில்உடன் தலையிட்டு சுமுகமான தீர்வை முன்வைத்து மீனவசமூதாயத்தின் வாழ்வுரிமைப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதுடன் அரச செயலகம் செயலிழப்பதால் சாதாரண பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை நீக்கும் கடமையையும் அரசு நிறைவேற்றவேண்டும்.

● யாழ். குடாநாட்டின் அடிப்படை வளங்களான பனை, தென்னை என்பவற்றை இராணுவத் தேவைக்கு தறித்தெடுப்பதை அரசும் ஆயுதப்படையினரும் உடனடியாக நிறுத்த வேண்டும். (த)

### வட பிராந்திய வகுப்பு தொ. சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நாளை நடைபெறவுள்ள குடாநாடு தழுவிய பூரண ஹர்த்தாலுக்கு வடபிராந்திய வகுப்புத் தொழிலாளர் சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது

இந்த ஹர்த்தாலுக்குமேற்படி சங்கத் தொழிலாளர்கள் அனைவரும் பூரண ஆதரவை வழங்குமாறு சங்கத்தலைவர் அருமைத்துரை கேட்டுள்ளார். (த)

### யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நாளை நடைபெறவுள்ள குடாநாடு தழுவிய பூரண ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்குமாறு யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தனது அங்கத்தவர்களை கேட்டுள்ளது.

இந்தக் ஹர்த்தாலுக்கான ஆதரவில் பாதுகாப்புப் பகுதி அங்கத்தவர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் அறிவித்துள்ளார் (த)

### யாழ்மாவட்ட வர்த்தகசங்கங்களின் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

புரிந்துணர்வு உடன்படிக்கையை சீராக அமுல்படுத்துவதில் அரசாங்கம் காட்டிவரும் அசமந்தப் போக்கைக் கண்டித்து மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நாளை நடைபெறவுள்ள ஹர்த்தாலுக்கு குடாநாட்டிலுள்ளசகல வர்த்தக சங்கங்களும் தமது பூரண ஆதரவை வழங்குமாறு யாழ் மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் வேண்டுகோள்விடுத்துள்ளது. (த)

# கயிற்றில் தொங்கியபடி வீட்டிற்குள் சடலம்

## அளவெட்டியில் சம்பவம்

அளவெட்டி பத்துப்பனையடிப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் அவரது வீட்டில்கயிற்றில் தொங்கியபடி நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான மோகன சுந்தரம் (வயது38)என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவர்.

இச்சம்பவத்தில் மேலும் தெரியவருவதாவது.

இவரது மனைவியும் பிள்ளைகளும் நயினாதீவிற்கு சென்றிருந்ததாகவும் தனிமையில் இருந்த இவர்நேற்று மாலை6மணியளவில் சமையலறையில் கயிற்றில்தொங்கியபடி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது முழங்காலிலும் கையிலும் காயங்கள் காணப்படுவதாகத் தெரியவருகிறது. (ந)

# கடலில் குளித்த மாணவன் சுழியில் அகப்பட்டு மரணம்

நண்பர்களுடன் கடலில் குளிக்கச் சென்ற மாணவன் சுழியில் அகப்பட்டு பரிதாபகரமாக மரணமானான்.

நேற்று முன்தினம் மாலை பருத்தித்துறை தும்பளைக் கடலில் குளிக்கச் சென்ற பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய மாணவன் சிறில் பிறின்ஸ் (வயது 15) என்பவரே மரணமானவராவார். (இ-23)

### நாளை

வரும்குடும்பங்கள் கடல்வழியில் பயணம்செய்வது தடுக்கப்படுகின்றன.

இவை எல்லாம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கையே சீர்குலைக்கும் நடவடிக்கைகளாகும்.

எனவே இத்தகைய புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிரான நடவடிக்கைகளை நாம் கண்டிக்கின்றோம் இராணுவத்தரப்பினதும் ஜனாதிபதியினதும் தன்னிச்சையான இந்நடவடிக்கை களால் தமிழ்த் தேசத்தில் மக்களின் இயல்புநிலை ஏற்படமுடியாமல் தடுக்கப்படுகிறது இதற்கு அரசு துணைபோகமுடியாது இந்நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டும் அரசியல்தீர்வின்மூலம் தமிழ்த்தேசமக்கள் ஆட்சிஉரிமை பெறவேண்டும் இதற்காக உருவாக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி 12.6.2002நாளை புதன்கிழமை நடைபெறும் பூரணஹர்த்தாலை முழுமையாக ஆதரிக்கின்றோம்மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறுஅழைப்புவிடுகின்றோம்என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மனித நேய அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நாடு தழுவிய ரீதியில் நாளை நடைபெறவிருக்கும் பூரண ஹர்த்தாலுக்கு குடா நாட்டு பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் பூரண ஆதரவு வழங்க வேண்டுமென்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்:

பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை மற்றும் மாணவர்களின் சுதந்திரமான கல்விக்கு அனுமதித்தல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து நடத்தப்படும் இந்த ஹர்த்தாலுக்கு குடாநாட்டுக் கல்விச்சமூகம் பூரண ஆதரவை வழங்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது என அவர் தெரிவித்துள்ளார். (த)

# கேள்விக்குறியான நுகர்வோர் பாதுகாப்பு;
# தடுப்பது அதிகாரிகளின் பெரும் பொறுப்பு

**யாழ். ஏஜெஆர்**
ஈச்சமோட்டை

ஒரு நாட்டில் வாழும் ஒவ்வொரு தனிமனிதனும் தான் நுகரும் பொருட்கள், சேவைகள் தொடர்பான உச்ச திருப்தியையும், பாதுகாப்பையும் பெறுவதற்கு உரித்துடையவனாவான்.

எனவே ஒரு நாட்டில் அந்த அரசாங்கம் தனது மக்களை பாதுகாக்கும்விதமாகபல சட்டங்களை இயற்றி அவற்றை உள்ளூராட்சி, நகர, கிராம சபைகளூடாகவும் ஏனைய அமைப்புக்களினூடாகவும் கடைப்பிடிப்பதன் மூலம் தனிமனிதனையும் அவனது குடும்பத்தையும் ஒட்டு மொத்த சமூகத்தையும் பாதுகாக்க முடிகின்றது.

நுகர்வோர் பாதுகாப்பு சம்பந்தமான சட்டங்கள்

நுகர்வோரின் உச்ச திருப்தியையும் பாதுகாப்பையும் பேணும் விதமாக நாட்டில் பல சட்டங்கள்காணப்படுகின்றன.

- பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டம் (1956)
- நுகர்வோர்கடன் சட்டம் (1982)
- நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் (1979)
- ஆபத்து விளைவிக்கும் மருந்துப் பொருட்கள் சட்டம்
- கசாப்புக் கடைச் சட்டம்
- உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்
- விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

மேற்குறிப்பிட்டுள்ள சட்டங்களில்1979ஆம்ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் பிரசித்தி பெற்றதும் முக்கியமானதுமாகும்.

இந்தச் சட்டமே ஒரு உற்பத்தி பொருள் தொடர்பான பங்கீடு, விலை நிர்ணயம், குறியிடல், பொதிசெய்தல், தரம் போன்றனவற்றை நுகர்வோருக்கு விளங்கப்படுத்தி இது தொடர்பாக சட்ட அதிகார எல்லை எத்தகையது என்பதையும்வெளிப்படுத்துவதோடு நுகர்வோர் வர்த்தகர்களை எந்தளவிற்குகேள்விக்கு உள்ளாக்கலாம் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

மக்கள் கவனிக்கவேண்டியவை

குறித்த ஒரு பொருள் தொடர்பான உற்பத்தித் திகதி, காலாவதித் திகதி, உச்சவிலை, உற்பத்தி செய்யப்பட்ட இடம், வியாபாரக் குறி, தரக்குறி, உள்ளீட்டுச் சேர்க்கைகள், சில பாவனை முறைகள் போன்ற விபரங்கள் மக்களுக்கு தெளிவாக தெரியப்படுத்த வேண்டும்.

கொள்வனவு செய்யும் ஒவ்வொருவரும் இவ்விடயத்தில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் ஒரு பொருளை வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுத்தும் போது விற்பனையாளனால் கொள்வனவாளனுக்கு பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டும்.

இப்பற்றுச் சீட்டு வியாபாரிக்கும் நுகர்வோருக்குமிடையிலானவியாபார தொடர்புச் சான்றிதழாக காணப்படுவதால் பிரச்சினைகள் ஏற்படுகின்றபோது இலகுவாகத் தீர்த்துக் கொள்ள உதவுகின்றது.

பாதை திறப்பு

யாழ் கண்டி வீதி திறக்கப்பட்டதனால் வெளி மாவட்டங்களிலிருந்து அதிகளவான வர்த்தகர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இவ்வாறு அதிகளவு வர்த்தக பொருட்கள் யாழ்.நகரில் வந்து குவிவதனால் மக்கள் குறைந்த விலைகளில்பல்வேறு பொருட்களை வாங்க முடிகின்றது. மேலும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்ட பல பொருட்கள் போட்டி வியாபாரம் காரணமாக வீழ்ச்சி கண்டுள்ளன. இது மக்களின் பொருளாதார ரீதியில் நன்மை பயப்பதாக தோன்றினாலும் போலிகள் பெருமளவு உட் புகுந்திருப்பதால் நுகர்வோர் பாதுகாப்பு கேள்விக் குறியாகி உள்ளது. தரமற்ற பொருட்கள் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.அதிக விலையில் பொருட்களைக் கொள்வனவு செய்து வந்த மக்களுக்கு தற்போது குறைந்த விலை என்றவுடன் தரம்,பாதுகாப்பு என்பனவற்றை கருத்தில் கொள்ளாது கொள்வனவு செய்யத் தோன்றுகின்றது.

தரம் பரிசோதிக்கப்பட வேண்டும்

இங்கு விற்பனைக்கு வரும் பொருட்களின் தரம் பரிசோதிக்கப்பட வேண்டியது பொறுப்புள்ள அதிகாரிகளின் கடமையேயாகும்.

குறிப்பாக மின்னியல் உபகரணங்கள், உயிரின வகைகள், தீன் பண்டங்கள் என்பனவற்றின் தரம், பாதுகாப்பு என்பன பரிசோதித்து தரமற்ற, பாவனைக்குதவாதவை உடன் அழிக்கப்பட வேண்டும்.

மின்னியல் சாதனங்கள் உரியபாதுகாப்புமுறைகளைப் பின்பற்றாது அமைக்கப்பட்டிருக்குமாயின் அதனை வாங்கிப் பயன்படுத்துபவர் உயிர்ச் சேதத்துக்கு உள்ளாக நேரிடும்.

இது போன்று உயிரினவகைகளும், இதில் தற்போது எங்கும்விற்பனையாகும் கோழிக்குஞ்சுகளை எடுத்து நோக்குவோமானால் சுகாதார முறைப்படி கிருமிநீக்கம் செய்யப்படாத, தடுப்பு மருந்து ஊட்டப்படாதகுஞ்சுகள் விற்பனைக்கு வருகின்றன.

இவற்றால் இதைக் கொள்வனவு செய்தவர்கள் பணரீதியான நட்டத்தைப் பெறுவதுடன்,நோய்களைஏற்படுத்தும் கிருமிகள் தொற்றிப் பெருகுவதற்கான வாய்ப்பும் அதிகமாகின்றது.

மேலும் உணவுப் பண்டங்களின் உற்பத்தி முடிவுத் திகதிகள் வர்ந்தக நிலையங்களில் உரிய அதிகாரிகளால் பரிசோதிக்கப்படவேண்டும்.

அத்துடன் வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியல்களைத் தொங்கவிடவும், நிறுவைப்படிகள், தராசுகளை நியமமாக உள்ளதா எனச் சோதிக்கவும் விற்பனையின் போது பற்றுச்சீட்டை கட்டாயம் வழங்கவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தொழிலாளர் நலன்

யாழ்ப்பாணத்தில் நுகர்வோர் பாதுகாப்பு ஒரு புறம் கேள்விக்குள்ளாகி இருப்பது போல் தொழிலாளர் நலன்களும் நீண்ட காலமாகவே கேள்விக்குள்ளாகியுள்ளது.

அதாவது யாழ்ப்பாண தனியார் வர்த்தக நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களின் நலன்கள் பற்றிய கவனிப்பு மிகமிக அருகியதாகவே உள்ளது.

தொழிலாளன் ஒருவனுக்கு தொழில் கொள்வோனால் போதிய சுகாதார வசதிகள், பாதுகாப்பு, வேலை செய்வதற்கு ஏற்ற சூழல் என்பனவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் அவனது எதிர்கால நலனைக் கருதி ஊழியர் சேமஇலாப நிதி(ஈ.பி.எவ்), ஊழியர் நம்பிக்கை நிதி (ஈ.ரி.எவ்) என்பனவும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் வைப்புச் செய்து அதைஅவன்தொழிலை விட்டு விலகும் போது கிடைக்கக் கூடியதாக வேண்டும்.

ஈ.பி.எவ் ஐப் பொறுத்தவரை ஊழியனின் ஊழியத்தில்வரும் தொகையின் 8%த்தையும் நிறுவனம் வழங்கும். 12% ஆனதொகையையும் சேர்ந்த திரட்டாகும். அதாவது ஊழியனின்தொகைக்கும் நிறுவனம்வழங்கும் தொகைக்கும் முறையே 2:3 எனும் விகிதம் பேணப்பட்டு வைப்பிலிட வேண்டும்.

அதேபோல் ஈ.ரி.எவ் நிறுவனத்தால் 3% ஆன அளவு மாதாமாதம் செலுத்தப்பட வேண்டும்.

இவை ஒழுங்காக செலுத்தப்படுகின்றதா என சம்பந்தப்பட்டஅதிகாரிகள்தொழில் நிறுவனங்களுக்கு தமது வெளிக்கள ஊழியர்களை பரிசோதனைக்காக அனுப்புவதன் மூலம்தெரிந்துகொள்ள முடியும்.

பொதுவாக யாழ்ப்பாண தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும் அதிகமான தொழிலாளிகள் இதுபற்றிய போதிய அறிவின்மை அல்லது அசட்டையீனத்தனத்தாலும், தொழில் கொள்வோரின் திட்டமிட்ட சதியினாலும் தொழிலாளர் நலன்களை இழக்கின்றனர்.

இது குறித்து அந்தந்த மாவட்ட தொழில் ஆணையாளர்கள் சிரத்தையுடன்நடவடிக்கைகள் எடுக்க முன்வர வேண்டும். சமூக நலன்களை நாம் பாதுகாக்க வேண்டுமாயின் இவ்வாறு பாதிப்புக்குள்ளாகும் தனி நபர்களின் பிரச்சினைகளை நாம் விரைவில் தீர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

விழிப்புணர்வு

எனவே மக்களாகிய நாம் நுகர்வோர் பாதுகாப்பிலும், தொழிலாளர் நலனிலும் விழிப்புப் பெறவேண்டும். ஆகவே இவை தொடர்பான நடைமுறை சட்ட விதிகளை கண்டறிந்துமோசடி நடவடிக்கைகளிலிருந்து விடுபடுவதோடு எமது எதிர்கால வாழ்வையும் ஆரோக்கியம் மிக்கதும், சுபீட்ச மானதுமாக மாற்றிக்கொள்ளலாம்.

இதற்காக எம் மண்ணில் பணியாற்றும் சம்பந்தப்பட்ட அமைப்புக்கள், அதிகாரிகள் தம்மை முழு அர்ப்பணிப்புடன் தம்மை கடமைகளில் ஈடுபடுத்தவேண்டியதும் நுகர்வோரையும், தொழிலாளிகளையும் விழிப்படையச்செய்ய வேண்டியதும் தலையாய கடமையேயாகும். ●

## வருடாந்த உற்சவம்

(இணுவில்)

இணுவில் கந்தசுவாமிஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 16 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 22 நாட்கள் நடைபெற்று அடுத்தமாதம் 9,10 ஆம் திகதிகளில் தேர் தீர்த்த உற்சவங்கள் நடைபெறவுள்ளன. (உ-8)

## ஏ-9 வீதிப் போக்குவரத்து நிறுத்துக

(திருநெல்வேலி)

மனிதநேய அமைப்புகள் ஒழுங்கு செய்துள்ள நாளைய ஹர்த்தாலுக்கு ஆதரவாக ஏ-9 வீதி ஊடான போக்குவரத்தை நாளைய தினம் முற்றாக நிறுத்துமாறு அவ்வமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (உ-43,3).

## வடமராட்சி படைத் தலைமையகத்தை மாணவர்கள் இன்று முற்றுகையிடுவர்

(திருநெல்வேலி)

வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மாணவிகளும், வடமராட்சி ஹாட்லிக் கல்லூரி மாணவர்களும் தமது கல்லூரிகளிலிருந்து படையினரை வெளியேறுமாறு கோரி நேற்று பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, இன்று வடமராட்சியின் படைத்தலைமையகம் பிரதான வாயில்களை அடைத்துபடையினரை வெளியேற விடாது அனைத்து பாடசாலை மாணவர்களும் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக வடமராட்சிப் பகுதி மாணவர் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (உ-43,3)

உடற்பயிற்சியில்

அது ஆன்மீக வளர்ச்சியாகவும் இருக்கும். எனவே தகுந்த உடற்பயிற்சி விளையாட்டுக்கள் எம்மை நல்லவர்களாக, வல்லவர்களாக நலமுடையோராக ஆக்கும். Tuition Tuition என்று பிள்ளைகளை விளையாட்டு பயிற்சிகளில் ஈடுபடுத்தாத பெற்றோர்களை இனியாவது இது குறித்தும் கவனமெடுத்து தமது பிள்ளைகளை மனிதம் உள்ள மனிதர்களாக ஆக்குவதே முதன்மை பெற வேண்டும். என்று எண்ண வைப்பது உங்கள் பொறுப்பு.

நன்றி
சுகமஞ்சரி

## குடாநாட்டிலும் படைக்கு ஆட்சேர்ப்பு அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

படைக்கு ஆட்சேர்ப்பதற்கான அறிவுறுத்தல்கள் அடங்கிய சுவரொட்டிகள் வடமராட்சியில் பரவலாகக் காணப்படுகின்றன.

மக்கள் அதிகமாகக் கூடுகின்ற இடங்களில் பெருமளவில் இவை காணப்படுகின்றன.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் கடந்த இருமாதங்களாக இடம்பெறும் இவ் ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்கான நாள் நீடிக்கப்பட்டிருப்பதும், 5 ஆயிரம் பேரைத்திரட்டும் முயற்சியில் இதுவரை 500 பேர் மட்டுமே இணைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-10,19)

## மீன்பிடியியல் பாடநெறி ஆதாரப்பயிற்சிமல்லாவியில்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் மீன்பிடியியல் பாடநெறியைக் கற்பிப்பதற்கு முன்னோடியாக ஆதாரப் பயிற்சி ஒன்று எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதிவரை மல்லாவியில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி நெறியில் பங்கு கொள்ள விரும்பும் மீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரிகளை எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக கடல்வள அபிவிருத்தி நிலையத்திற்கு சமுகம் தந்து பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ். பல்கலைக் கழக கடல்வள அபிவிருத்தி நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (உ)

## துரித பொருளாதார உறவே ரணிலின் இந்திய பயணத்தின் நோக்கு

### இந்து செய்தித்தாள் கருத்து

(கொழும்பு)

இந்திய- இலங்கை நாடுகளிடையே துரிதமான பொருளாதார ஒருங்கிணைப்பு உறவுகளை மேற்கொள்ளும் நோக்குடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்திய விஜயத்தை மேற்கொண்டுள்ளார் என இந்து செய்தித்தாள் செய்தி வெளியிட்டுள்ளது.

இருதசாப்தங்களாக நடைபெற்றுவரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக இலங்கை அரசாங்கத்தால் மேற்கொண்டு வரும்நடவடிக்கைகள் குறித்து இந்தியாவுக்கு விளக்கிகூறுவதுடன்,

இவ்விரு நாடுகளிடையேயான பொருளாதார உறவுகளை சீரமைப்பு செய்வதற்கு இந்தியா உடனடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என இந்தியப்பிரதமரை இந்தியப் பயணத்தின்போது பிரதமர்ரணில்கேட்டுக்கொள்வார் எனவும்.இந்து செய்தித்தாள் சுட்டிக்காட்டியுள்ளது. (உ-3)

## சிகரெட் பாவனையின் பாதிப்பு அதிகரிப்பு

சிகரெட் விற்பனையால் அரசாங்கத்துக்கு கிடைக்கும் இலாபத்தை விட, சிகரெட் பாவனையால் பாதிக்கப்படுபவர்களுக்கு சிகிச்சையளிக்க செலவாகும் தொகை அதிகமென சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன தெரிவித்துள்ளார்.

புகைப் பிடிக்கும் பழக்கத்தால் உலகில்உள்ளஅனைத்து நாடுகளிலும் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை வருடா வருடம் அதிகளவில் அதிகரித்து வருகிறது.

இதேவேளை இப் புகைப் பிடித்தலுக்கு தற்போது இளைஞர்களே கூடுதலான அளவில் அடிமையாகி வருகிறார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

# ரணிலின் ஐ.தே.க முன்னணி அரசு விரைவில் கவிழும் நாம் வெகு விரைவில் ஆட்சிக்கு வருவோம்

## ஜனாதிபதி சந்திரிகா சூளுரை

**ரணில் விக்கிரமசிங்கா "சமாதான கீதத்தையே" பாடிக் கொண்டு சுற்றித்திரிகிறார். இதைத் தவிர வேறு எதுவுமே இன்றைய அரசாங்கத்திடம் இல்லை. எனவே விரைவில் நாங்கள் ஆட்சிக்கு வருவோம் இதற்கு நான் டிசம்பரில் பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் எல்லோரும் ஆயத்தமாக இருக்கவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த மாதம் 23ஆம் திகதி ஜனாதிபதி மாளிகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் களுக்காக நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்துள்ளதாக செய்தி வெளியிட்டுள்ள கடந்த 2 ஆம் திகதி சண்டேலீடர் மேலும் அக்கூட்டத்தில் இடம்பெற்ற சில சுவையான நிகழ்வுகளை வெளியிட்டுள்ளது. அவற்றில் சில வருமாறு:**

நான் ஒரு போதும் களவெடுக்கவும் இல்லை, கொலை செய்யவும் இல்லை, கொலை செய்ய உத்தரவு இடவுமில்லை. எனவே எனக்கு எதிராக குற்றம் ஒன்றுமே இல்லை என்பதால் அரசாங்கத்தினர் எனது பாதுகாப்பு உத்தியோகத்தர்களைப் பிடித்து என்னைச் சூழ்ந்து ள்ளவர்கள் கொலைகள் செய்தார்கள் என்று அவர்கள் மீது குற்றம் சுமத்தி வருகிறார்கள். நான் எனது பெற்றோர் வங்கியில் இட்ட நிலையான வைப்புப் பணத்தின வட்டியில் வாழ்ந்து வருகிறேன்.

என்னையும் எனது பிள்ளைகளையும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் என்ற போர்வையில் ஐ.தே.கட்சியினர் அலரி மாளிகையில் வைத்து கொலை செய்ய வந்தபோது எம்மைக் காப்பாற்றிய எனது பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் இன்று நெருக்கடிகளைக் கொடுத்து வருகிறார்கள்.

ஆர்ப்பாட்டக்காரர் மீது துப்பாக்கிச் சூடோ குண்டாந்தடிப் பிரயோகமோ மேற்கொள்ள வேண்டாம் என்று பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் நான் கூறினேன் என்று அவர் குறிப்பிட்டு விட்டு கூட்டத்தில் சமூகமளித்திருந்த மேர்வின் சில்வாவைப்பார்த்து 'மேர்வின் அந்த ஆர்ப்பாட்டக் கூட்டத்தோடு நீயும் வந்தாயு அல்லவா' என்றார்.

மேர்வின் ஐ.தே.கட்சியிலிருந்து சந்திரிகா குமாரதுங்காவின் விசுவாசியாக மாறியவர். உடனே மேர்வின் சில்வா சந்திரிகாவைப் பார்த்து "ஆம். நான் வந்தேன். ஆனால பாதிவழியில் நின்று விட்டேன். நீங்கள் விரும்பினால் என்னை ஒரு சாட்சியாகப் பயன்படுத்தலாம்" என்றார் பணிவோடு.

இந் நிலையில் தனது பேச்சை மீண்டும் தொடர்ந்த ஜனாதிபதி, ரணில் விக்கிரமசிங்கா நம்பிக்கைக்குரிய ஒரு மனிதர் அல்லர்.

**தமிழில்: கபிலர்**

அவர் நினைப்பதை சொல்வதும் இல்லை, செய்வதும் இல்லை. அவர் தனக்கு ஏதாவது தேவை என்றால் வந்து மென்மையாக என்னுடன் கதைப்பார். ஆனால் மனதில் ஒன்றை வைத்திருப்பார்.

சுதந்திரபொலிஸ் ஆணைக்குழு விரைவில் நியமிக்கப்பட வேண்டும என்று அவர் இப்போது விரும்புகிறார். எமக்கு இந்த ஆணைக்குழு அனுகூலமாக அமையாது. என்று மேலும் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் சமூகமளித்திருந்த முன்னாள் பிரதி அமைச்சர் சாந்தா பிரேமரதனா "எமது கஷ்டங்களை எடுத்துக கூறுவதற்கு வசதியான் நேரத்தை ஒதுக்கித் தருமாறு நான் நூறு தடவைகள் ஜனாதிபதியைக் கேட்டும் அவை செவிடன் காதில் சொன்ன சொற்களாகி விட்டன என்று கூறியதும் ஜனாதிபதிக்கும் அவருக்குமிடையே வார்த்தைப் பரிமாற்றங்கள் இடம் பெற்றன.

ஜனாதிபதி: சாந்தா, எத்தனை தடவைகள் நீங்கள் என்னிடம் அப்படிக் கேட்டீர்கள்?

பிரேமரத்னா: நூறு தடவைகள்.

ஜனாதிபதி: அப்படிக்கூறிய சந்தர்ப்பங்களைக் கூறுங்கள்.

பிரேமரத்னா: ஒவ்வொரு மத்திய குழுக் கூட்டத்தின் முடிவிலும்.

ஜனாதிபதி: எங்கள் கட்சி தோல்வியடைந்தபின் ஏழு கூட்டங்கள் தானே நடந்துள்ளன. ஆனபடியால் நீங்கள் நூறு தடவைகள் என்னைக் கேட்டிருக்க முடியாதே. பொய் பேசாதீர்கள். நான் ஒரு போதும் பொய் சொல்வதில்லை.

இன்னொரு கட்டத்தில் பிரேமரத்னா சில பத்திரிகை அறிக்கைகளிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா ஜனாதிபதி சந்திரிகாவிற்கு எதிரான குற்றங்களை விபரிப்பது பற்றி அங்கு எடுத்துக் கூறிய போது ஜனாதிபதி சந்திரிகா மீண்டும் கூர்மையான வார்த்தைகளை பிரேமரத்னா மீது பிரயோகித்தார்.

"இங்கு சொல்லப்பட வேண்டும் என்று திஸநாயக்கா விரும்புவதை நீங்களே இங்கே வந்து சொல்கிறீர்கள். இதைவிட அவர் இங்கே வந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். ஒரு முறை திஸநாயக்கா ரக்ஸிக்காரருக்கு கடன் பெற்றுக் கொடுப்பதற்காக எனது பெயரைப் பயன்படுத்தினார். நான் அது பற்றி நேரடியாக விசாரித்தபோது மன்னிசகும்படி என்னைக் கும்பிட்டார் என்றார் ஜனாதிபதி.

எங்களுக்குச் சரியான பத்திரிகை வசதி இல்லாதது பெரிய குறை எனினும் மூன்று செய்திப் பத்திரிகைகள் எம்மிடம் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

# உயிர்ச்சத்தும் கனிப்பொருளும் நிறைந்த பால் மனித உடல் நலத்திற்கு ஆதாரம்

உணவானது மக்கள் உண்ணும் முறைக்கும் உபயோகிக்கும் உணவுப்பொருட்களுக்கும் ஏற்ற வகையில் வேறுபடும். இதைத்தவிர பொருளாதார நிலை பழக்க வழக்கம், மதம், சமூக, அந்தஸ்து சுற்றியுள்ள இயற்கை வளங்கள் போன்றவற்றிலும் தங்கியிருக்கும். எனினும் பால் ஆனது இவை அனைத்தையும் கடந்த எல்லோராலும் விரும்பப்படும் ஒரு உணவாகக் காணப்படுகின்றது.

பாலின் கட்டமைப்பை நாம்பார்க்கும் போது இது 87வீதமான நீரையும் கிட்டத்தட்ட 13வீதமான திண்மப் பதார்த்தத்தையும் உள்ளடக்கியதாக காணப்படுகிறது. இதனால் தயிர் போன்றவற்றை தயாரிக்கும் போது அதிக நீர் காணப்படுவதை அவதானிக்கலாம் இன் நிரின் அளவானது வேறு சில காரணிகள் மூலமும் சற்றுக் கூடிக்குறையலாம்.எனவே பாலை வாங்கும் நுகர்வோர் சிலர் கலப்படம் செய்யப்பட்டுள்ளதா என சந்தேப்படுவதும் உண்டு.

### நிறையுணவு

இதன் தன்மைகளை எடுத்து நோக்கும் போது பாலானது முலையூட்டிகளினால் உருவாக்கப்படும் மிகச்சிறந்த உணவாகும். இது உயர்ந்த சக்தியையும் சமப்படுத்தப்பட்ட ஊட்டசத்துக்களையும கொண்டுள்ளதோடு, பாலூட்டிகளின் இளைய எச்சங்களை சகல வழிகளிலும் பாதுகாக்கக்கூடியதாகவும் அதன் வயிற்றின் கொள்ளளவை நிரப்பி மன நிறைவை தரக்கூடியதாகவும் இருக்கிறது. இதனால் இது ஒரு மனிதனின் அல்லது மிருகத்தின் பிறப்பின் பின்னான முதல்முக்கியமான காலத்தை செவ்வனே கழிக்க ஏதுவாக இருக்கின்றது. ஏனையோருக்கு இது அவர்களின் உணவின் தரத்தை முன்னேற்றக் கூடியதாக அமைந்து காணப்படுகிறது. அதாவது புரதம் காபோவைத்ரேற், கொழுப்பு, நீர், எல்லாவிதமான பி.உயிர்ச்சத்துக்கள் உயிர்ச்சத்து ஏ, கல்சியம், பொசுபரசு முதலிய அனேக ஊட்டச்சத்துக்களை உள்ளடக்கியிருக்கிறது. பாலில் புரதம் உயர்ந்த தரத்தை உடையதாக இருப்பதனால் உட்றப்புரதங்களை கட்டியெழுப்ப அவசியமுள்ளவர்களுக்கு அதாவது ஊறுபடத்தக்க குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் போன்றவர்களும் சிபார்சு செய்யப்படுவதுடன் ஒரே விதமான உணவு உண்ணும் வயோதிபர்களுக்கும் விரும்பப்படுகிறது.

உயிர்ச்சத்துக்களுக்கும் கனிப் பொருட்களுக்கும் பால் சிறந்த முதலாகும். மேலும் பால் அதிகளவு கல்சியத்தைக் கொண்டுள்ளது. இக் கல்சியம் சமிபாட்டின் பின்பு மிகவும் இலோக உறுஞ்சப்படுகிறது. எனவே எலும்புகளின் வளர்ச்சியிலும் பால் முக்கியமானது. உயிர்ச்சத்தான cயும் இரும்பும் பாலில் சிறிய அளவிலேயே காணப்படுவதால்

**பொருண்மியச் செய்தி**

பாலுடன் குறைநிரப்பிகளான காய் கறி, பழவகை, மற்றும் பச்சை இலைகள், பருப்புவகை போன்றவையும் சேர்த்துக் கொள்ளல் விரும்பத்தக்கது.

### பால் உற்பத்தி

பால் உற்பத்தியினை எடுத்து நோக்குவோமாயின் உலகில் 9% வீதம் பசுவிலிருந்துத பெறப்படுகிறது.

5.9வீதம் எருமையிலும்
1.5வீதம் வெள்ளாட்டிலும்
1.6வீதம் செம்மறியாட்டிலிருந்தும இருந்தும்பெறப்படுகிறது.

இவ்வாறு பல்வேறுபட்ட மிருகங்களில் இருந்த பாலைப் பெறும் போது எந்த ஒன்று மிகவும் போசனையுள்ளது என்ற ஒரு கேள்வி பலரிடத்தில் தோன்றுகின்றது. இதில செம்மறியாடு மற்றும் எருமைப்பாலிலேயே ஒப்பீட்டு ரீதியில் போசனைப் பதார்த்தங்கள் கூடுதலான பங்கை வகிக்கின்றன. எனினும் பந்தி ஒன்றில் குறிப்பிட்டவாறு பல்வேறு காரணிகளையும் கருத்தில் கொண்டு நோக்கும் போது நடைமுறையில் பசுப் பாலே குடிப்பதற்கு விரும்பப்படுகின்றது. இரண்டாவதாக எருமைப்பால் விரும்பப்படுகின்றது. வெள்ளாடு மற்றும் செம்மறியாட்டுப்பாலானது பாற்கட்டி தயாரிப்பிலும் புளிப்பான பால் தயாரிப்பிலுமே முக்கிய பங்கு வகிக்கின்றது.

பசுப்பாலை அசையாது வைத்திருந்தால் பாலின் மேற் பகுதியில் கொழும்புச் சிற்ருண்டைகள் தோன்றும். எருமைப்பாலில் இது சிறிதளவே தோன்றும். ஆனால் வெள்ளாடு செம்மறியாடு போன்றவற்றில் இது தோன்றாது. ஏனெனில் பசுவின் கொழுப்பு சிற்றுருண்டைகளுடன் ஒப்பிடும் பொழுது ஆட்டுப்பாலில் சிற்றுறுண்டைகள் அளவில் மிக மிக சிறியவை. எனவே ஆட்டுப்பாலானது பசுவின் பாலிலும் பார்க்க போசனை கூடியதாகவும் இலகுவில் சமிபாடு அடையக் கூடியதாகவும் இருக்கிறது. ஆனால் வெள்ளாட்டுப்பால் விரும்பத்தகாத மணம் ஒன்றினைக் கொண்டிருக்கும். இதில் காணப்படும் கொழுப்பு உடையும் போது வெளியாகும் கொழுப்பமிலத்தினால் மணமேற்படும் இதனைக்குறைக்க பாலை முடியுமானவரை சூடாக்கி அருந்த வேண்டும். இவற்றை விட ஆட்டுப்பாலானது 'அஸ்மா' எனப்படும் சுவாச நோய்க்கெதிரான காரணிகளையும் கொண்டுள்ளது.

### தாய்ப்பாலே சிறந்தது

பசுப்பாலில் கூடியளவு உயிர்ச்சத்து 'ஏ' முன்னோடி காணப்படும். ஆனால் எருமை வெள்ளாடு செம்மறியாட்டில் இது இல்லை. இதனாலேயே பசுப்பால் ஓரளவு மஞ்சள் நிறம் கொண்டிருக்கும் ஏனையவை வெள்ளை நிறமானவை. எருமைப் பாலானது விரைவாக உடையும் தன்மை உடையது. அத்துடன் நீருடன் சேரும் தன்மையும் குறைவு. இதனால் தயிர் உற்பத்தியில் இது சிறந்தது. எது எப்படி இருந்த போதிலும் பால் குடிக்கும் குழந்தைக்கு தாய்ப்பாலே சிறந்தது. இரும்பையும் உயிர்ச்சத்து 'சீ'யையும் தவிர அனேக போசனைப் பொருட்கள் இதில் உண்டு. அத்துடன் மிக ஆரோக்கியமானதும் சுத்தமானது மாகும். அத்துடன் தொற்று நோய்க்ளுக்கெதிராக சிறு பிள்ளைகளைப் பாதுகாக்கின்றது. பிறப்பின் போது சில மாதங்களுக்கு இரும்புச்சத்து குழந்தையின் சேமிப்பிலிருந்து பயன்படுத்தப்படும். தாய்ப்பாலானது நீண்டகாலம் தேவையான எல்லாப் போசனைகளையும் கொண்டிருக்காது. எனவே பழச்சாறு அரைதத பழங்கள் மற்றும் சத்துதரும் உணவுகளை மிகை நிரப்பி உணவாக கொடுத்தல் சிறந்தது எனினும வெளிநாட்டு உள்நாட்டு விளம்பரங்களையும் அவற்றால் கூறப்படும் செயற்கை பால்மாக்களையும் கொடுப்பதைத் தவிர்த்து இயலுமான காலத்திற்கு தாய்ப்பால் ஊட்டுவதே இன்றியமையாதது.

இறுதியாக ஒருவர் ஒரு ஆரோக்கியமான உணவைப் பெற முயற்சிக்க வேண்டும். அந்த வகையில் உங்கள் உணவில் நாளாந்தம் பாலைச்சேர்த்துக் கொள்வது நல்லதல்லவா. பாலை சகிக்கஅல்லது ஜீரணிக்க முடியாத பரம்பரை இயல்பு இருப்பின் பாலுற்பத்திப் பொருட்களான தயிர், பாற்கட்டி மற்றும் ஏனைய இலற்றோஸ் இல்லாத பாலுற்பத்திப் பொருட்களை உபயோகித்து உங்கள் போசனையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

# நாளைய பூரண ஹர்த்தாலுக்கு தமிழ்க் கூட்டமைப்பு முழுஆதரவு

## சங்கரி, மாவை, சிவாஜிலிங்கம் கூட்டாக அறிக்கை

(யாழ்ப்பாணம்)

புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசினாலும் தமிழீழ விடுதலைப் புலிகளினாலும் கைச்சாத்திடப்பட்டு நூறு நாட்கள் கடந்து விட்டன. இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டவுடன் இயல்பு வாழ்க்கை ஏற்படப் போகின்றது என்ற நிம்மதி ஏற்பட்டது. இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல்த் தீர்வு ஏற்ப்பட்டு சமாதானம் ஏற்படும், போர் நிரந்தரமாக நிறுத்தப்படும் என்ற எதிர்பார்ப்புக்கள் இதயத்தில் எழுந்தன.

ஆனால் எதிர்பார்த்தது போல தமிழ் மக்களிடையே- தமிழ்த் தேசத்தில் இயல்பு வாழ்க்கை ஏற்படாமல் இடர்களை, சீர்குலைவை ஏற்படுத்துவதில் இராணுவ்த் தரப்பினரும், ஜனாதிபதியும் இரகசியமாகச் செயற்படுகிறார்கள்.

முன்பு இராணுவத்துடன் ஒத்துழைத்த ஜனாதிபதியின் சார்பான ஆயுதக் குழுக்களும் ஒன்றுபட்டு செயற்படுகின்றன என்ற ஐயப்பாடுகள் எழுந்துள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு 90 நாட்களின் பின் மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிப்பதற்குப் பதிலாக ஒரு பக்கத்தில் இராணுவமும் மறு பக்கத்தில் கடற்படையினரும் புதிய கட்டுப்பாடுகளை விதித்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தையே சீர்குலைக்கும் வகையில் அச்சுறுத்தல்களில் ஈடுபடுகின்றனர். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட புலிகளின் அரசியல் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடுகின்றனர்.

புதிய இராணுவத் தளங்கள், கண்காணிப்பு நிலைகள் உருவாக்கப்படுகின்றன. இன்று வரையும் காவலரண்கள் அமைக்கவெனப் பனை, தென்னை வளங்கள் லட்சக் கணக்கில் அழிக்கப்பட்டு விட்டன, அழிக்கப்படுகின்றது. ஏற்கனவே உயர் பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனப் படுத்தப்பட்ட வலி வடக்கு உட்பட்ட பிரதேசங்களுடன் மேலும் சாவகச்சேரி தென்மராட்சிப் பிரதேசத்திலும் உயர் பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கும் அறிவித்தல்கள் வருகின்றன. மீளக்குடியமர்வுகள் தடுக்கப்படுகின்றன. வன்னியில் இருந்து

(2ம் பக்கம் பார்க்க)

# இன்று ஒரு தகவல்

## உண்மையான தேடல் எது?

ஒருவருக்கு கடவுளைப் பார்க்க வேண்டும் என்று ஆசை! அதற்கு என்ன செய்வது என்று யோசித்தார். ஒரு வழியும் சரியாக வரவில்லை. கடவுளைப் பார்க்கமுடியவில்லை.

அச்சமயத்தில் ஓர் ஆன்மீகப் பெரியவர் அவ்வூருக்கு வந்தார். இவர் உடனே அவரிடம் போய் 'நான் இறைவனைப் பார்க்க வேண்டும் ஒரு வழி சொல்லுங்கள் என்றார்'!

'நீ...தனிமையான ஒரு இடத்தில் இருந்து இறைவனை நினைத்து தியானம் பண்ணு ! கடவுள் காட்சி கொடுப்பார் என்றார். உடனே இவர் ஒரு காட்டுக்குப் போனார். கண்ணை மூடினார். உட்கார்ந்து தியானம் செய்ய ஆரம்பித்தார்.

'ஏய்...யார் நீ... இங்கே என்ன செய்கிறாய்?' என்று ஒரு சத்தம்! இவர் கண்ணை திறந்து பார்த்தார். பக்கத்தில் ஒரு வேடன் நின்று கொண்டிருந்தான் அவன் மறுபடியும் கேட்டான் 'இங்கே என்ன பண்றே?' என்று! 'நான் இறைவனைத்தேடி தியானம் செய்கின்றேன்' என்றான்,

இறைவனா? அது எப்படியிருக்கும். சிங்கம், புலி, கரடி மாதிரி இருக்குமா? எப்படி இருக்கும் சொல்? எனக்குத் தெரியாது இந்தக் காட்டில் எதுவும் இல்லை. நீ விபரத்தைச் சொல் நான் எங்கிருந்தாலும் பிடித்துக் கொண்டு வருகின்றேன் என்றான். அவருக்கு இது சங்கடமாக போய் விட்டது.

'இவன் விவரம் தெரியாத ஆளாக இருக்கின்றான். நம்ம தியானத்துக்கு வேறு இடைஞ்சலாக இருப்பான் போல் இருக்கிறது. இவன் தொந்தரவிலிருந்து நாம் எப்படி மீள்வது' என்று யோசித்தார். மறுபடியும் அவன் திரும்பி அங்கே வரக்கூடாது. இதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தார்.

'இதோ பார் இறைவன் எப்படி இருப்பான் என்று கேட்டாயல்லவா' மனுஷ உடம்பிலே சிங்கத்தினுடைய தலை இருக்கும் எங்கேயிருந்தாலும் பார்த்துக் கொண்டு வா,, என்றார்.

'சரி கொண்டுவருகின்றேன் என்று சொல்லி அவன் புறப்பட்டான். காடு முழுவதும் தேடினான். தண்ணீர் கூட குடிக்கவில்லை. மாலைப் பொழுது ஆகியது ரொம்பவும் களைத்துப்போய்விட்டான்.

நினைத்துப் பார்த்தான் 'நான் இக் காட்டுக்கு ராஜா. என்னால் ஒரு மிருகத்தை கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் இதற்குப் பின்பும் நான் உயிருடன் இருக்க வேண்டுமா?' உடனே அங்கேயிருந்த கொடியைப் பறித்து தூக்குகயிறு மாதிரி ஒரு மரத்தில் கட்டினான்.

அதில் தனது தலையை விட்டான் தற்கொலை செய்வதற்காக அந்த நேரத்தில் பக்கத்தில் ஒரு புதரினுள் சத்தம் கேட்டது. திரும்பிப்பார்த்தான்.

அங்கே ஒரு உருவம் நின்று கொண்டிருந்தது அதுக்கு மனித உடம்பு சிங்கத்தின் தலை!

'அடடா உன்னைத்தான் இவ்வளவு நேரமாக தேடிக் கொண்டிருந்தேன். என்று இறங்கி ஓடினான் அவ்வுருவத்தை கொடியால் சுற்றிக் கட்டி பெரியவரிடம் இழுத்துக் கொண்டு வந்தான்.

'இதோ பார் . . . நீகூறிய மிருகம் கொண்டுவந்துவிட்டேன்'. என்றான். இவர் ஒன்றும் புரியாமல் கண்ணைத்திறந்து பார்த்தார்.

அந்த நேரத்தில் அந்த கொடி ஏதோ ஒரு உருவத்தை சுற்றியிருப்பது தெரிந்தது. உடனே வந்திருப்பது இறைவன் என்பதை புரிந்து அத்திசை நோக்கி வணங்கினார்.

இறைவா! இங்கே, நான் உன்னை நினைத்து தியானம் செய்துகொண்டு இருக்கின்றேன் என்னை விட்டு இந்த உயிரைக் கொல்லும் வேடனுக்கு காட்சி கொடுத்திருக்கின்றாய் 'இது நியாயமா?' என்றார்.

அதற்கு அசரீரியாக அக்குரல் கேட்டது 'நீ என்னையே நினைத்தாலும். உன்னுடைய முழு மனதும் என்னிடம் வரவில்லை. ஆனால் இந்த வேடன் காலையிலிருந்து மாலை வரை என்னை மட்டுமே நினைத்துக் கொண்டிருந்தான் தண்ணீர் கூட அருந்தாமல் முழு மனதுடன் என்னை தேடினான் இது தான் உண்மையான தேடல் அதனால்தான் அவனுக்கு காட்சி கொடுத்தேன் என்றார். ●

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சிறுவர் நிலை குறித்த அறிக்கையை மாதாந்தம் வெளியிடத் தீர்மானம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சிறுவர்களால் கல்வி, சுகாதார போசாக்கு மற்றும் தொழில் துறைகளில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் பற்றிய மாதாந்த நிலைவர அறிக்கையினை இம் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் தயாரித்து வெளியிடுவதற்கு சிறுவர்க்கான அபிவிருத்தி நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக மேற்படி நிறுவனத்தின் செயலாளர் தி. பாலதயானந்தன் குறிப்பிடுகையில்,

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழ்கின்ற சிறுவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றனர். ஆயினும் சிறுவர்களின் பிரச்சினைகள் மற்றும்தேவைகள் எதுவுமே தீர்க்கப்படாத நிலையில் இருந்துவருகின்றன.

இத்தகைய சிறுவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின் அவர்களின் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். இது குறித்து செயலாளர் குறிப்பிட்டார்.

இம் மாதாந்த நிலைவர அறிக்கைகளின் பிரதிகள் குடாநாட்டிள்ள சர்வதேச, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள், ஊடகத்துறையினர் மற்றும் அரச திணைக்கள அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்படும். (உ-77)

## நுணாவில் பாடசாலையை பொலிஸார் புனரமைப்பு

(தென்மராட்சி)

யுத்தத்தினால் சேதமாக்கப்பட்ட நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் சாவகச்சேரி பொலிஸாரால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

அரசின் நூறுநாள் வேலைத் திட்டத்தின் கீழ் இப்பாடசாலையைப் பொலிஸார் புனரமைப்புச் செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

(உ-77)

## பழையஇடத்தில் இயங்கும்

(தென்மராட்சி)

நுணாவில் மேற்கு ஸ்ரீகணேசாவித்தியாலயம் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் அதன் பழைய இடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-77)

## சுயாதீன ஆணைக்குழு அடுத்த மாதம் செயற்படும்

### அமைச்சர் கருஜெயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் சுயாதீன ஆணைக் குழுக்கள் அடுத்த மாதம் அமைக்கப்படவுள்ளதாக மின்சக்தி, எரி பொருள்துறை அமைச்சர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

கண்டியில் முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்கட்சிகளின் பூரண ஆதரவுடன் ஆணைக்குழு அமைப்பது தொடர்பான பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாட்டில் உன்னதமான ஜனநாயக சமுதாயத்தை உருவாக்குவதே ஐக்கியதேசிய முன்னணி அரசின் நோக்கம் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (க-08)

## கடும் சுகவீனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வர் பிரான்ஸிஸ் பிலிப் சேவியர் கடும் சுகவீனமுற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

(உ-3)

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவிருந்த கல்விசார் ஊழியர்களின் விபரத்தினைக் கணனி மயப்படுத்துவது தொடர்பான பயிற்சி வகுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## சிறுவர் அபிவிருத்திக்கு 20க்கும் அதிக திட்டங்கள்

(தென்மராட்சி)

கடந்த மாதம் தென்இலங்கையில் இருந்து தரை வழிப் பாதையூடாக குதிரையில் யாழ்ப்பாணத்துக்கு சமாதானக்குதிரைப் பயணத்தினை மேற்கொண்டு வந்திருந்த கிரிஸோ அன்டர்சன், மிகிர தயதிலகா இரத்தினம் ஆகியோர் இணைந்து குடாநாட்டில்சிறுவர் மேம்பாட்டுக்கான திட்டங்களை அமுல் செய்யவுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழ்கின்றசுமார்4ஆயிரத்து500க்கு மேற்பட்ட சிறுவர்களின் அபிவிருத்திக்காக 20 க்கு மேற்பட்ட திட்டங்களை அமுல் செய்ய இவர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. (உ-77)

## நெசவு நிலையம் சேதம்

(காரைநகர்)

காரைநகர் தோப்புக்கட்டுப் பகுதியில் அமைந்திருந்த அரச நெசவு நிலையம் கடந்த கால போர் அனர்த்தங்களினால் முற்றாகச் சேதமடைந்துள்ளது.

இதேவேளை, இப்பகுதியில் மீளக் குடியமர ஆரம்பித்துள்ள பொது மக்கள், அங்குள்ள பொதுவிடங்களை சிரமதானம் மூலம் துப்புரவு செய்து வருகின்றனர்.

(உ-246)

## அம்புலன்ஸ் சாரதி இன்மையால் சேவைகள் பின்னடைவு

(தென்மராட்சி)

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் இரு அம்புலன்ஸ்கள் இருக்கின்ற போதிலும் ஒரு சாரதி மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

இதனால் தற்போது ஒரு அம்புலன்ஸில் மட்டுமே அவசர சிகிச்சைக்கானநோயாளர்கள் யாழ்ப்பாணம் அரசினர் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றனர். (உ-77)

## பயிலுநர் வங்கி உதவியாளர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி, பயிலுநர் வங்கி உதவியாளர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வேம்படி மகளிர் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தகுதியற்ற விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை வங்கியாளர் பயிற்சி நிலையத்தால் அறிவிக்கப்பட்டிருப்பதாக மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

(உ)

## உள்ளூர் மென்பான உற்பத்தியாளர் பாதிப்பு

(தென்மராட்சி)

கொழும்பில் இருந்து அதிக அளவில் மென்பானங்கள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படுவதால் யாழ்ப்பாணத்தில் உற்பத்திசெய்யப்படும் மென்பானங்களைச் சந்தைப் படுத்துவதில் அவற்றின் உற்பத்தியாளர்கள் பெரும் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளனர்.

அதேவேளை இத்துறையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களும்தமதுதொழிலை இழக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (உ-77)

## வன்னி மாணவர்நிலைபற்றி அமைச்சரிடம் எடுத்துரைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் ஐ. எம். இஸ்ஸதீன் அமைச்சர் நூர்தீன் மசூரை நேரடியாக சந்தித்து வன்னி மாணவர்ளின் நிலைபற்றி விளக்கிக் கூறினார்.

இதையடுத்து வன்னியில் இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசப் பாடசாலைகளின் தளபாடப் பற்றாக்குறையை தீர்த்து வைப்பதற்காக வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் 15 இலட்சம் ரூபாவை வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்திற்கு ஒதுக்கியுள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் க. சண்முகலிங்கத்தின் பணிப்புரையையடுத்து வன்னி இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேச பாடசாலைகளின் குறைபாடுகளை கண்டறிய மாகாண கல்விப்பணிப்பாளர் இஸ்ஸதீனின் தலைமையில் சென்ற குழுவினரின் அறிக்கையையடுத்தே இந்நிதி ஒதுக்கீட்டை வன்னிப் புனர்வாழ்வு அமைச்சரிடம் மாகாணக் கல்விப் பணிப்பாளர் கோரியிருந்தார். (க-04)

## சிந்தனைக்கு விருந்து

### வயிரவிப் பிள்ளையார் தளரா உறுதி உடையார்

ஒருலொறிப் பார விறகினைக்கட்டி
உக்தியே மிதிவண்டி ஏறி
வருகிறார் முதுமை வாயிலில் நிற்கும்
வயிரவிப் பிள்ளையர் மிக்க
பெரியதாம் குடும்ப பாரத்தைச்சுமந்து
பிக்கல்கள் பிடுங்கல்களிடையே
தருவென வளையா உளத்துணிவுடனே
தருக்குடன் மிதிக்கிறார் பெடலை!
தரு-மரம்

-பழையவன்

### சலன சித்திரம் அமைப்பு

# சமாதான ஆர்வலர்களை இணைத்து 'சமாதான இயக்கம்' உருவாக்கம்

(யாழ்ப்பாணப்)

சமாதானத்தை விரும்பும் அனைவரையும் இணைத்து இயங்கும்பொருட்டுசமாதான இயக்கம் என்றவொரு தனிப் பிரிவை மாவட்டத் திரைக் கலைச் சங்கங்களின் சம்மேளனமான 'சலனசித்திரம்' அமைப்பு உருவாக்கியுள்ளது.

இது குறித்து அவ்வமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றது அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தலைநகரத்தில் யுத்தவெறி பிடித்த இனவெறியரை எதிர்த்து கடந்த காலத்தில் மிகத் துணிச்சலுடன் நாம் போராடியிருக்கின்றோம். அதே போன்று இன்றும் போராடி வருகின்றோம்.

'ரோம்' நகரம் எரிந்த பொழுது பிடில் வாசித்துக் கொண்டிருந்த 'நீரோ' மன்னரின் வாரிசுகள் அல்லர் நாம். எமது நாடு எரிந்து மக்கள் அழிந்து போன பின் மண்ணுக்கும் விண்ணுக்குமாகக் கலை வளர்க்க விரும்புபவர்கள் அல்லர் நாம்.

நாடும்மக்களும்யுத்தத்தால் அழிந்ததுபோதும்ஏழைஇளைஞர்கள் இனரீதியாகப் பிரிந்து மோதியதும் போதும். இனியாவது நம் இளைஞர்களின் வாழும் உரிமையை அங்கீகரிப்போம். அவர்களுக்கு வாழ வழிகாட்டுவோம். மக்களின் பெயரால் மீளவெரு யுத்தம் மூளாது தடுக்க வேண்டியவர்கள் மக்களேமக்கள் மட்டுமே! ஒத்த கருத்துள்ள அனைவரும் இதற்காக இன்றே ஒன்றிணைவோம்.

சமாதானத்தை விரும்பும் அனைவரையும் இணைத்து இயங்குவதற்காக சமாதான இயக்கம் என்றவொரு தனிப் பிரிவை எமது சலனசித்திரம் அமைப்பில் உருவாக்கியிருக்கிறோம்.

மக்களுக்காக இயங்கும்நாம் கடந்த காலத்திலும் மக்களிடமிருந்துமட்டுமேநிதிபெற்று வந்தோம். இனியும்அவ்வாறே நிதி பெற விரும்புகின்றோம்.

சலனசித்திரம் அமைப்பு சமாதானத்தின் பெயரால் அந்நிய நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி பெறும் நிறுவனம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். என்று சலனசித்திரம்ஆட்சிக்குழுவின் மேற்படி அறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-106)

## தங்குமிட வசதியின்மையால் வெட்ட வெளிகளை நாடும் வெளியூர் வாசிகள்

(தென்மராட்சி)

தென் இலங்கையில் இருந்து யாழ்ப்பாணம் வருகின்றவர்கள் இங்கு தங்குவதற்கான சரியான இடங்கள் இல்லாமல் இருப்பதால் அத்தகையவர்கள் யாழ்ப்பாணத்தில் பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்கி வருகின்றனர்.

இத்தகையவர்கள் தமது இரவு நேரங்களை துரையப்பா விளையாட்டரங்கு மற்றும் நாக விகாரையை அண்டிய திறந்த வெளிகளிலேயே செலவிடுகின்றனர்.

நாக விகாரையின் முன் அமைந்துள்ள யாத்திரிகள் தங்கு விடுதியில் குறைந்தளவு எண்ணிக்கையானவர்கள் மட்டுமே தங்கக் கூடியவசதிகள் உள்ளன.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கான சுபாஸ் ஹோட்டல்ஞானம்ஸ் ஹோட்டல் மற்றும் அசோகாஹோட்டல் ஆகியன பாதுகாப்புப் படையின் பாவனையில் இருந்து வருகின்றன.

இவை தவிர யாழ்ப்பாணத்தில் ஓரிரு தங்கு மிடவசதிகள் மட்டுமே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-77)

## மே மாதத்தில் மட்டும் 3 முதியவர்கள் கொலை

(தென்மராட்சி)

குடாநாட்டில் தனித்திருக்கும் முதியோர் கொலைசெய்யப்படும் சம்பவங்கள் அண்மைக்காலங்களில் அதிகரித்து வருகின்றன.

இவ்வருடம் மேமாதத்தில் மட்டும் இத்தகைய மூன்று சம்பவங்கள் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்றுள்ளன.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 72 வயதான நடனசிகாமணி, கரவெட்டியைச் சேர்ந்த 60 வயதான சுப்பு கந்தசாமி - வண்ணார்பண்ணையைச்சேர்ந்த 60 வயதான செல்லப்பா அரியகுட்டி ஆகிய மூவரதுகொலைகளுமே மே மாதத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இக் கொலைச்சம்பவங்களுக்கான அடிப்படைக்காரணங்கள்பற்றியோ யார் இவற்றின் சூத்திரதாரிகள் எனபது பற்றிய தகவல்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை.

(உ-77)

## ஆயுதக்கொள்வனவுமோசடி இடைக்கால அறிக்கை விரைவில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய இராணுவ ஆயுதக்கொள்வனவு சம்பந்தமாக விசாரணை செய்யும் விசேட குழு அதன் முதலாவது இடைக்கால அறிக்கையைச்சமர்ப்பிக்கவுள்ளதாகசட்டத்தரணி பியூருத் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

தாக்குதல்களுக்கு உபயோகிக்கப்படும் 2 ஹெலிகொப்டர்கள் கொள்வனவு சம்பந்தமாகவே விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்த2ஹெலிகொப்டர்களும் 1999 ஆம் ஆண்டு 31 லட்சம் டொலருக்கும் 27 லட்சம் டொலருக்கும் கொள்வனவு செய்யப்பட்டன. (உ-9)

# நிரந்தர சமாதானத்தை எட்ட நாம் என்ன செய்ய வேண்டும்?

## கொழும்பில் திறந்த கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மாவட்டத் திரைக்கலைச் சங்கங்களின் சம்மேளனமான 'சலனசித்திரம்' அமைப்பின் ஏற்பாட்டில், நிரந்தர சமாதானத்தை எட்ட நாம் என்ன செய்ய வேண்டும், என்ற தலைப்பில் அண்மையில் கொழும்பு- மருதானை - டீன்ஸ் வீதியிலுள்ள சி.எஸ். ஆர் மண்டபத்தில் திறந்த கலந்துரையாடல் ஒன்று நடை பெற்றது.

இக்கலந்துரையாடலின்இறுதியில் நிரந்தரசமாதானத்திற்கு அவசியமான நான்குதீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. அவை வருமாறு:-

- இலங்கை ஒரு பல்லின நாடு. இலங்கையர் அனைரும் சமவாய்ப்புடன் சரிநிகராக வாழும் உரிமை உடையவர்கள் என்பதை அரசு உடனே பிரகடனப்படுத்த வேண்டும்.
- இனவாதம், யுத்தம் இரண்டையும் தோற்கடிக்க அனைத்து இன மக்களும் தீவிரமாக இணைந்தியங்க வேண்டும்.
- இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண யுத்தம் தவிர்ந்த வேறு வழிகளை மட்டுமே சம்பந்தப்பட்ட தரப்பினர் கையாள வேண்டும்.
- பிளவுற்றுப் பலவீனப்பட்டுள்ள இலங்கை மீது ஏகாதிபத்திய நாடுகளின் தலையீட்டை எதிர்த்து முறியடிக்கவும் நிரந்தர சமாதானத்தை நிலை நாட்டவும் உழைக்கும் வர்க்கத்தின் தலைமையில் அனைத்து இன மக்களும் அணி திரள வேண்டும்.

அரசியல் கட்சிகள் தொழிற்சங்கங்கள் மற்றும் பொது அமைப்புகளைச் சேர்ந்த பலர் கலந்து கொண்ட இக் கலந்துரையாடலில்,

- அரசு- புலிகளிடையே இன்று நிலவும் தற்காலிக யுத்த நிறுத்தம் நிரந்தரமாக்கப்பட வேண்டும்.
- புலிகள் இயக்கம் மீதான தடையை அரசு உடன் நீக்குவதுடன் காலம் தாழ்த்தாது தீர்வுக்கான பேச்சை ஆரம்பிக்க வேண்டும்.
- சமாதானத்திற்கான பாதையில் உழைக்கும் வர்க்கத்தின் பங்கும் பலமும் உணரப்பட வேண்டும்.
- நோர்வேயின் அனுசரணையுடன் சமாதானம் கிட்டும் என்று நம்பியிராமல்சமாதானத்திற்காக அனைவரும் தொடர்ந்து போராட வேண்டும். என்றும்,
- சகல ஊடகங்களும் சமாதானம் சார்ந்த விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். உள்ளிட்ட பல்வேறு கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன. (உ-106)

# நயினை நாகபூசணி அம்மன் பாமாலை - 02

(உற்சவகாலம்)



### வியக்க அருள்வாய் பூஷணியே!

கண்ணிற் கருணையும் கைதனிற் காப்பும்
கருத்துடனே கைகூப்பி
எண்ணும் ஏற்றமும் இளநகை எழிலும்
இன்பமுடன் எப்போதும்
பண்ணும் பணியும் பல்லுயிர் அனைத்தும்
பயபக்தி மேலுற
விண்ணும் மண்ணும் வியக்க அருள்வாய்
வியன்நாக பூஷணியே

-நயினைக் கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை

### நாக பூசணி அருளுமே!

நீல. மாகடல் மீதிலேயொரு
நித்திலம் என விளங்கிடும்
கோல மாமலைக் கோவினார்மகள்
கோமளை அருள் சாமளை
காலமே யுன் கரங்களிலெமைக்
காத்தருள் புரி நாரணி-இந்த
ஞாலமே யுனதாட்சிதான்-சிவ
நாக பூசணி அருளுமே!

-நயினைக் கவிஞர்-இராகுலன்

### கண்ணீர் தொலைந்திட அருள்

நீலக் கடல் தாலாட்டும் நாகபூசணி
நிம்மதியாய் வாழ்ந்திட அருள்வாயே
காலைக் கதிர் புகழீட்டும் நாகபூசணி
கண்ணீர் தொலைந்திட அருள்வாயே

-நல்லை அமிழ்தன்

### அருள்தனைச் சுரப்பீர்!

நயினை மண்ணின் வித்தகியே
நாகம்மைத்தாயே
நாடெங்கும் புகழ்பாட
நாவினிலே வருவாய்

அலை அலையாய் மக்கள் கூட்டம்
அலைகடல் தாண்டி வருமே
அன்னையவள் அருள் சுரக்க
ஆறுதலும் அடைவர்.

நுரைபொங்கும் கடல்கூட
உன்புகழைப்பாடும்
நிம்மதியாய் வாழ மக்கள்
அருளதனைச் சுரப்பீர்.

-நா. சுரேஸ்

### குறைகளெல்லாம் நீங்கி விடும்

நயினையின் கடலோரத்தில்
நாகபூசணி அம்மை ஆட்சி
நாடிவரும் பக்தற் கெல்லாம்
நல்லருளே புரியும் காட்சி
வினைகளைத் தீர்த்து வைக்கும்
வேதவல்லித் தாய் அவளே
வேதாந்த சித்தாந்த சொரூப
வித்தகி யாய்நிற் பவளே
தீராத போராலே மக்கள்
திசைமாறி அலைந் துலைந்து


திறனற்றுப் போனார்கள் காக்க
திரிசூலித் தாய் வருவாள்
நிலையான சமாதானம் வந்து
நிலைபெற்று மக்கள் எல்லாம்
நீடூழி வாழ்வதற்கு அம்மை
நிதமும் அருள் புரிவாள்
தேடியவள் பாதார விந்தங்கள்
தினமும் தொழுது நிற்போம்
கூடிவரும் பெரு வாழ்வு
குறைக ளெலாம் நீங்கிவிடும்.

-வ. யோகானந்தசிவம்

# சிவாவின் இறுதிப் பயணம்




விடுதலைப் புலிப் பிரதிநிதிகள் அஞ்சலி செலுத்துகின்றனர்...




பௌத்த பிக்குவின் அஞ்சலியுரை...



பேராசிரியர் சண்முகதாஸ், கலாநிதி சிவலிங்கராசா ஆகியோர் அஞ்சலி செலுத்துகின்றனர்...



அமைச்சர்களின் அஞ்சலி...




தனையனின் இறுதி வணக்கம்...



பேரர்கள் பேழையைத் தாங்குகின்றனர்...




வாத்தியம் இசைக்க இறுதி ஊர்வலம்...



தீந்தமிழ்த் தலைவனை தீ சங்கமிக்கிறது...

படங்கள்:- துன்னாலை திருநீபன்

# வீட்டிலுள்ள தூசிகளும் ஒவ்வாமைக்கு காரணமாகும்

வீட்டில் உண்டாகும் தூசியைசுவாசிக்கும்பொழுது சிலருக்கு சுவாசத் தொகுதியுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உண்டாகின்றன.

முக்கியமாக தொய்வு, தும்மல், மூக்கிலிருந்து நீர் வடிதல் போன்ற அறிகுறிகள் ஏற்படுவதுண்டு.

இதற்கு காரணியாக இருப்பது தூசியில் வரும் ஒருவகை நுண்ணங்கி இதுஆங்கிலத்தில் **'House Dust Mite'** என்று அழைக்கப்படுகின்றது அதாவது வீட்டுத்தூசி வண்டு.

நுண்ணங்கியின் வாழிடம்

இதை நுணுக்குக்காட்டி மூலமாக மாத்திரமே பார்க்க முடியும். இது சூடான ஈரலிப்புள்ள சூழலில் வாழும். மனிதனின் தோலிருந்து தினமும் கோடிக்கணக்கான இறந்த கலங்கள் அகன்றுகொண்டே இருக்கின்றன. இவைநாம்வசிக்கும் வீடுகளில்(படுக்கைகளில்) நில விரிப்புகளில், கால் துடைப்புகளில் பரந்துகாணப்படும். இப்படியானஇறந்த கலங்கள்தான் இந்த நுண்ணங்கிகளின் உணவாகும்.

இந்த நுண்ணங்கியிலிருந்து வெளியேறும் கழிவுகளைச் சுவாசிப்பதால் சிலருக்கு ஒவ்வாமை (**Allergic reaction**) ஏற்படுகின்றது. ஒவ்வாமை; தொய்வு (அல்லது இழுப்பு) தும்மலாக வெளிப்படுகிறது. தொய்வு, தும்மல் போன்ற ஒவ்வாமை நோய்கள் இருப்பவர்கள் வீட்டுத் தூசி நுண்ணங்கியை வீட்டிலிருந்து அகற்ற வேண்டும்.

நுண்ணங்கியை கட்டுப்படுத்தல்

இவ் நுண்ணங்கியை வீட்டிலிருந்து முற்றாக அகற்றுவது கடினமாக இருப்பினும் அதன் தொகையை குறைப்பதன் மூலம் அதனால் ஏற்படும் தாக்கத்தைக் குறைக்க முடியும்.

நுண்ணங்கியை அகற்றுவதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது படுக்கையறை. இங்குதான்வீட்டுத்தூசி நுண்ணங்கி அதிகமான பிரச்சினைகளை உருவாக்குகின்றது. இங்குதான் நாம் ஒருநாளில் மூன்றில் ஒருபகுதிநேரத்தைக் கழிக்கின்றோம்.

**வைத்தியகலாநிதி**
**ந. சிவராஜா**
**மருத்துவபீடம்,**
**யாழ். பல்கலைக்கழகம்**

தலையணை, படுக்கை முதலியவற்றை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். இவற்றை பொலித்தீன் உறைகளினால் மூடிவிடுவது சிறந்தது. இப்படிச் செய்வதால்தலையணை, மெத்தையில் உள்ள நுண்ணங்கியின்கழிவுகளைச் சுவாசிக்கும் சந்தர்ப்பம் குறைகின்றது. தினமும்அகன்று கொண்டிருக்கும் தோற்கலங்களும் நுண்ணங்கியை அடையமாட்டாது.

தலையணை உறைகள், படுக்கை விரிப்புக்கள், பாய் முதலியவற்றை அடிக்கடி கழுவ வேண்டும் 60பாகை செல்சியஸ் வெப்பமேற்றிய நீரில் வீட்டுத் தூசி நுண்ணங்கி இறந்துவிடும்.

அடிக்கடி கட்டில்மெத்தை பாய், முதலியவற்றை வெயிலில் காயவிட வேண்டும். அறைகளில் ஈரலிப்புத் தன்மையைக் குறைப்பதற்கு யன்னல் கதவுகளை திறந்துவிட்டு சூரிய ஒளிகிடைக்கக் கூடியதாக விடவேண்டும்.

குழந்தைகளுக்குகொடுக்கப்படும் விளையாட்டுப்பொருட்கள் அடிக்கடி கழுவி சூரிய ஒளியில் காயவிட வேண்டும்.

நிலவிரிப்புக்கள் (**Carpets Doormats**) அடிக்கடி வெளியே சூரிய ஒளியில் போடப்பட வேண்டும். கழுவக்கூடியவை கழுவப்பட வேண்டும். வெற்றிடத் துப்பரவாக்கியை (**Vacuum cleaner** பாவித்து சுத்தப்படுத்த வேண்டும். தொய்வு போன்ற ஒவ்வாமை நோய்கள் இருப்பவர்கள் வீட்டில் நிலவிரிப்புக்கள் பாவிக்காது இருப்பது நல்லது.

பொதுவாக வீட்டில் தூசி பெருகாதுபார்த்துக் கொள்ள வேண்டும். புத்தகங்கள் சிறிய தூசி படியக்கூடிய சாமான்கள், உடைகள்முதலியவற்றை மூடிய அலுமாரிகளில் வைப்பது நல்லது. ஈரத் துணியால் வீட்டுத் தளபாடங்களை அடிக்கடிதுடைக்க வேண்டும். வீட்டுக் கதவுகளில் தொங்கும் திரைச்சீலைகளை அடிக்கடி துவைக்க வேண்டும்.

வளர்ப்பு பிராணிகளின் பங்கு

ஒவ்வாமைக்கு காரணமாக இருப்பதில் வீட்டு வளர்ப்புப் பிராணிகளும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இவற்றில் பூனைகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஒவ்வாமையினால் உண்டாகும் தொய்வு போன்ற நோய் உள்ளவர்கள் வீட்டில் பூனை வளர்ப்பதை நிறுத்த வேண்டும் பூனைகளைஅப்புறப்படுத்தினாலும் நோய்குறைவதற்கு 6முதல் 12மாதங்கள் எடுக்கும் என்பதை ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும்.

நன்றி
சுகமஞ்சரி




## உதைபந்தாட்ட போட்டி
## பருத்தித்துறைஅணிவெற்றி

(சுண்டுக்குளி)

யாழ். வந்துள்ள தென்னிலங்கை போக்குவரத்து சபையின உதைபந்தாட்ட அணியினர் கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை லீக்கின் தெரிவு அணியுடன் இரண்டாவது உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்டனர்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற மேற்படி போட்டியில் பருத்தித்துறை அணியினர் வெகு சாதுரியமாக ஆடி போக்குவரத்துச் சபை அணியை 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றனர்.

பருத்தித்துறை அணியைச் சேர்ந்தஅரவிந்தன், ஸ்ரீதரன், கருணாரட்ண, ஸ்ரீகாந் ஆகியோர் ரசிகர்களின் பாராட்டைப் பெற்றுக் கொண்டனர். (க-110)

## 7 விக்கெட்டுகளால்
## மேற்கிந்திய அணி வெற்றி

மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் நியூசிலாந்து அணிக்குமிடையே சென்லூசியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 7 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்துஅணி, 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 210 ஓட்டங்களைப்பெற்றது.

இதில் லூவின்சன் ஆட்டமிழக்காமல் 58 ஓட்டங்களையும் ஹரிஸ் 50 ஓட்டங்களையும் ஸ்ரீவன் பிளெமிங் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதேவேளை, மேற்கிந்திய தீவுகள் அணி 40 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 211 ஓட்டங்களைப்பெற்றது.

பிறைன்லாரா ஆட்டமிழக்காமல் 59 ஓட்டங்களையும் ராம்மிசர்வா 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

இரு அணிகளுக்குமிடையிலான 4வது ஒருநாள் போட்டி நாளை றினிடாட்டில் நடைபெறவுள்ளது. (உ-9)

### பேச்சுக்கு முன்னர்
## இரண்டு நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்

(கொழும்பு)

தாய்லாந்தில் பேச்சுக்கள் தொடங்குவதற்கு முன் இரண்டு தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகள்நோர்வே தூதுக்குழுவினரிடம் கேட்டுள்ளனர். ஊர் காவற்றுறை உள்ளிட்ட தீவுப்பகுதிகளில்அரசியல் அலுவலகங்களை திறப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

வன்னிக்கும் கிழக்குப்பிராந்தியத்திற்கு மிடையே கடல் மார்க்கமொன்றை பயன்படுத்த அனுமதிக்கப்படல் வேண்டும் இவைகளே அந்த இரண்டுமாகும்.

இவைகள் இரண்டையும் மறுப்பது போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயலாகும் என்பதே புலிகளின் நிலைப்பாடு என்று கிளிநொச்சியிலிருந்து வரும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன்ட் புறுகொவ்டே யாழ்ப்பாண இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் பேசியுள்ளார் எனினும் கடற்படை இவ்விரண்டிற்குமே மறுப்பு தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

இவ்விடயங்கள் பற்றி தீர்வு காண்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, தாய்லாந்துப் பேச்சுக்களுக்கான அணியை தெரிவு செய்வதில் இருதரப்பினரும் தீவிரமாகஈடுபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ)

# அமெரிக்காவை அழித்தே தீருவோம்
# பழி வாங்கத் துடிக்கிறது அல்கெய்டா

(வாஷிங்டன்)

அமெரிக்கா பல பயங்கரவாத தாக்குதல்களை மேலும் எதிர்நோக்க வேண்டிவரும் என்று அல்கெய்டா அமைப்பின்பேச்சாளர் 'சொலைமான் கோசை' இணையத்தளத்தில் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதலில் பாரம்பரியமற்ற ஆயுதங்கள் பயன்படுத்தப்படலாம் என்று தெரிவித்தஅவர், அமெரிக்காவால் தாங்கள பாதிக்கப்பட்ட அளவிற்கு இன்னமும் அமெரிக்கா பாதிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ஈராக் பலஸ்தீனம், ஆப்கானிஸ்தான், சூடான், பிலிப்பைன்ஸ், பொஸ்னியா, காஷ்மீர் ஆகிய இடங்களில் நேரடியாகவும், மறைமுகமாகவும் அமெரிக்கா பலரை கொன்றுள்ளது.

இதனால், 10 லட்சம் சிறுவர்கள் உட்பட 40 லட்சம் அமெரிக்கர்களைக் கொல்லும் கடமை தமக்குண்டெனவும்,

இதன் 2 மடங்கு அமெரிக்கர்களை இடம்பெயரச் செய்வதுடன் ஆயிரக்கணக்கானோரைக்காயப்படுத்தி அங்கவீனர்களாக்க வேண்டுமென்று தாம்திட்டமிட்டிருப்பதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

## பயிற்சியில் ஈடுபட்ட விமானம் வீழ்ந்தது

(சென்னை)

சென்னையை அடுத்த தாம்பூரம் அருகே தேசிய மாணவர் படைக்குச் சொந்தமான கிளைடர்விமானம் ஒன்று நேற்று முன்தினம் இந்திய படையின் முகாமுக்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

இவ் விபத்தில் தேசிய மாணவர்படையின் அதிகாரி குறூப்கப்டன் பவானும் இதே படையைச் சேர்ந்த மாணவியொருவரும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சுமார் 150 அடி உயரத்திலிருந்து இந்த விமானம் திடீரென தரையை நோக்கி விழ்ந்தது:

வழக்கமான பயிற்சியளிப்பின் போது இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. எனினும் இது பற்றிய விசாரணைகளை தேசியவிமானப்படை மேற்கொண்டுவருகின்றது. (உ-4)

### பாகிஸ்தானுடனான
## முறுகலைத் தணிக்க இந்தியா பிரயத்தனம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானுடனான முறுகலைத் தணிக்கும் நடவடிக்கைகளில் இந்தியாஇறங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைவாக பாகிஸ்தான் இந்திய இராஜதந்திரப் பிரதி நிதித்துவத்தைஅதிகரிப்பது, இந்திய வான்பரப்பில் பாகிஸ்தான் விமானங்கள் பறப்பதற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குவது, இந்தியா பாகிஸ்தான் எல்லைச் சாலையோரங்களில் நிறுத்தப்பட்ட பஸ், ரயில் போக்குவரத்துக்களை ஆரம்பிப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட விருப்பதாக இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் இடம்பெற்ற இந்தியப் பாராளுமன்றக் கட்டடத்தின் மீதானதாக்குதலை தொடர்ந்து பாகிஸ்தான் மீதான உறவுகளை இந்தியா முறித்துக் கொண்டிருப்பது தெரிந்ததே. (உ-8)

## விமானத்தைகடத்த முயன்ற இருவர் சுட்டுக்கொலை

(அடிஸ்அபாபர்)

உள்ளூர் சேவையில் ஈடுபட்டிருந்த விமானம் ஒன்றை கடத்தமுற்பட்ட இருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

எதியோப்பாவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொல்லப்பட்டவர்களிடமிருந்து கத்திகள், மற்றும் கூரிய ஆயுதங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்விமானத்தில் பெரும்பாலும் பாதுகாப்பு அதிகாரிகளே பயணம் செய்துவருவதும்,

கடந்தவருடம் ஏப்ரல் மாதத்தில் இதேபோன்று உள்ளூர் சேவை விமானம் ஒன்று சூடானுக்கு கடத்திச் செல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (உ-9)

### பிரான்ஸ் பாராளுமன்ற தேர்தல்
## நடு நிலை வலதுசாரிக் கட்சி முன்னணியில்

(பரிஸ்)

பிரான்ஸில் நேற்ற முன்தினம் நடைபெற்ற முதல் சுற்று பாராளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி யத்ஸ்ராத்தின் கட்சி வெற்றியீட்டியுள்ளது.

ஜனாதிபதியின் நடுநிலை வலது சாரிக் கட்சி 43 சதவீத வாக்குகளை பெற்றுள்ளது.

அத்துடன், இடதுசாரிகளிற்கு 36 சதவீதவாக்குகள் கிடைத்துள்ளதாக பிரான்ஸின் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிராஸ்ஸின் இரண்டாம் சுற்றுத் தேர்தல் அடுத்தவாரமளவில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-8)

புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார்உடைத்து

குறள்

# வலம்புரி

## மாணவர் கும்மாளம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான, கலைப்பீட மாணவர்கள் கோஷ்டி மோதலில் ஈடுபட்டுள்ளதால் பல்கலைக் கழகத்தின் சொத்துக்கள் நாசமாகியுள்ளன.

குறிப்பாக பல்கலைக் கழகத்தின் பாலசிங்கம் ஆண்கள் விடுதி, விஞ்ஞான பீடத்தின் மாணவர் பொதுஅறை என்பன மாணவர்களால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

பொங்கு தமிழ் எழுச்சியை நடத்தி உலகத் தமிழர்களின் புகழ்பெற்ற யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தமது புகழை தாமே தரை மட்டமாக்கி விட்டனர்.

இதில் வேடிக்கைஎன்னவெனில் பொங்கு தமிழ் எழுச்சியில் படையினரே வெளியேறு என்று கோசமிட்ட மாணவர்கள் இப்போது அதே படையினரைத் தமது பல்கலைக் கழகத்திற்கு அழைத்து ஐயா நாங்கள் ஓர் இனமாக இருந்தாலும் ஒற்றுமை குறைந்தவர்கள் நீங்கள் வாசலில் வந்து நின்றால் தான் நாங்கள் மனிதர்களாக நடப்போம் என்பது போல் குரங்காட்டம் ஆடி தமிழரின் மானத்தை விற்றுள்ளனர்.

ஒரு புறத்தில் தங்கள் கல்வியையே தியாகம் செய்து மண் மீட்பிற்காக ஒரு சாரார் பாடுபட வெட்டுப் புள்ளியால் தட்டுண்டு வந்தவர்கள் மகாபொல 'பல்கலைக்கழக நிதி என்பவற்றைப் பெற்று பட்டப் படிப்பை மேற்கொள்ளும் வாய்ப்பைப் பெற்ற போதிலும் தமக்கு பின்னே இருக்கும் தியாகங்களை மறந்து தலைகீழாக நடப்பது வேதனைக்குரியது.

தமிழீழப் போராட்டம் என்பது ஒரு சாராருக்குரியதல்ல. அது ஒட்டு மொத்தமான ஈழத் தமிழருக்குரியது.

எல்லைப் புறத்தில் ஓர் வேங்கை தோள்மீது ஆயுதத்தைச் சுமந்து காவல் புரிகிறானேஏன்? அவனது பெற்றோர் அவனுக்காக வன்னி சென்று குடிசையில் குடியிருக்கிறார்களே அது ஏன்?

பல்கலைக்கழகம் சென்ற நீங்கள் குடித்துவிட்டுக் கும்மாளம் போடுவதற்கல்ல, வாள்கொண்டு வளாக வீதியில் வம்பாட்டம் புரிவதற்கும் அல்ல.

அடக்கப்பட்ட மண்ணின் விடிவுக்காக என்பதை நீங்கள் ஒரு கணம் உணர வேண்டும்.

# உடற்பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம்

# உடல் நலத்தைப் பேணுவோம்

## மருத்துவ விளக்கம்

வைத்தியகலாநிதி
**செ. சு. நச்சினார்க்கினியன்**
(மருத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்)

சுகநலன் என்பது நாம் எப்பொழுதும் கூறி வநததுபோல் உடல், உள, சமூக, ஆன்மீக மேன்மை அடைதலாகும். உடற்பயிற்சி என்று இங்கு நாம் குறிப்பிடுவது, ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக முக்கியமாக உடல் தசைகளை நல்ல நிலையில் பேணுவதற்காக செய்யப்படும் தேக அப்பியாசமாகும். இது நம் பள்ளிக்கூடத்திற்கு அல்லது, வேலைக்கு செல்லும்பொழுது சைக்கிள் ஓட்டுவதையோ, சமையலுக்காக அம்மிக்கும், அடுப்புக்கும், நீருக்குமாக நடப்பதையோ, அல்லது யோகாசன பயிற்சியையோ உள்ளடக்காது.

### உடற்பயிற்சியும் யோகாசனமும்

உடற்பயிற்சி என்று நாம் குறிப்பிடும் பொழுது, அது எமது தசைநார்களை முறுக்கேற்றுவதற்கு, நீண்டநேர வேலைக்கு, விளையாட்டிற்கு ஏற்றபடி தாங்கும் திறன் (**Endurance**)சக்தியைவளர்ப்பதற்குஉடலைநெகிழ்ச்சியுடன் (**Suppleness**) இயங்குவதற்கு உதவும் ஒரு முயற்சியாகும். இது, யோகாசனத்திலிருந்து வேறுபடுகின்றது. யோகாசனம் உடலையும் உள்ளத்தையும்ஒருங்கிணைத்துசெயற்படவைக்கின்றது. இங்கு உடல் உறுதி பெறுவதைவிட தசைகள் தளர்வடைவதற்கு இடமளித்து (**Relaxation**) உள்ளத்தையும் ஒருநிலைப்படுத்தி சாந்தியையும் சாந்தத்தையும் உணரவைக்கின்றது. இது ஆன்மீக மேம்பாட்டையும், உள நன் நிலையையும் உடல் இயக்கத்தின் ஊடாகவும் தியானத்தின் மூலமாகவும் கட்டி எழுப்புகின்றது. எனவேதான் இங்கு யோகாசனப் பயிற்சிகளை உடற்பயிற்சியிலிருந்து வேறாக்குகின்றோம்.

உடற்பயிற்சியானது, வேறு விதமாக செயற்படுகின்றது. இங்கு முறையான உடற்பயிற்சியின் பின் இருதயம் வேகமாகத் துடிக்க வேண்டும் மேல்மூச்சு கீழ் மூச்சு வாங்கவேண்டும்வியர்த்துவடியவேண்டும்உடலில் இம்மாற்றம்நடைபெற்றால்தான் நாம் உடற்பயிற்சி என்று கூறுகின்றோம். இவ்வாறான உடற்பயிற்சி தசை நார்களுக்கு வலுவூட்டுவதுமல்லாமல் உடலில் இருக்கும் அனைத்து உறுப்புக்களையும் சிறப்பாக இயங்கத் தூண்டுகின்றது. இதில் முதன்மை பெறுவது இருதயம். இருதயம் ஒரு நிமிடத்திற்கு 72 முறை சுருங்கி விரிவடைந்தாலும் (துடிப்பு), இதனால் ஒரு நிமிடத்திற்கு 18 லீற்றர் இரத்தம் இருதயத்தினூடாக உடலின் பகுதிகளுக்கு அழுத்தத்துடன் அனுப்பப்பட்டாலும் இருதயம் தன் வேலைப்பாட்டிற்கு முடியுருநாடிகள் எனப்படும்கொரோனரி (**Coronary arteries**)மூலமாகவே குருதியை பெற்றுக் கொள்கின்றது. இந் நாடிகளில் இரத்தோட்டத்திற்குஏற்படும் அடைப்பே மாரடைப்பு என்னும் பயங்கர வியாதியை உண்டாக்குகின்றது. தேகப் பயிற்சி விளையாட்டு என்பன இந்நிலை ஏற்படுவதைத் தடுக்க உதவுகின்றது. இருதயத் துடிப்பு மேற்கூறியவாறு அதிகரிக்க புதிய இரத்தக் குழாய்கள் உருவாகி (ஓரளவுக்கு **By press** போல்) ஒவ்வொருஇரத்தநாடிகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்துகின்றன. எங்காவது அடைப்பு ஏற்பட்டால் உடனே குருதி இவ்வாறான குழாய்களினூடாக ஓடி தேவையான ஒட்சிசன், சக்தியை இருதயத்தசைகளுக்கு வழங்கமுடிகின்றது. மாரடைப்பு தடுக்கப்படுகின்றது. அது மட்டுமல்லாமல்குருதிக்குழாயில் படிகின்ற கொலஸ்ரோல் போன்ற கொழுப்பு அமிலங்கள்உடலில் அதிகமாக சேர்வதை தடுக்கவும்தேகப்பயிற்சி, விளையாட்டுகள் உதவுகின்றன.

### மாரடைப்பை தடுத்தல்

மாரடைப்பு வராமல் தடுக்கமுக்கிய காரணிகள். அளவான நல் உணவு - உடலியக்கம் - புகைப்பிடிக்காமை- மதுப்பாவனை இல்லாமை முதலியனவாகும். நாம்20-25 வயதுகளில் எடுத்தஅதேயளவு உணவை வயது அதிகரித்த பின்பும் குறைக்காமல் உண்ணுகின்றோம். ஆனால் குறைந்த வயதில் ஓடி, ஆடியவை, வேலை செய்தவைஎன்பதைக் குறைத்துக்கொள்கின்றோம்.

எனவே உண்ணுகின்ற அதிகளவு உணவு கொழுப்பாக மாற்றப்பட்டு உடலில் சேமிக்கப்படுகின்றது. குருதி நாடிகளும்இதற்குவிலக்கல்ல. எனவே இந்நாடிகளின் உட்சுவரில் கொழுப்பு அமிலப்படிவங்கள் ஏற்பட்டு உள்விட்டம் குறைந்து இலகுவில் அடைப்பு ஏற்படுகின்றது.

### உடற்பயிற்சியின் அவசியம்

தேகப்பியாசம் இதே காரணத்துக்காகவும், உடலில் ஏற்படுத்தும் வேறு மாற்றங்களினாலும் உயர் குருதி அமுக்கத்தில் ஓரளவு அமுக்கத்தை குறைக்கும். அது ஏறத்தாழ 48 மணி நேரங்களுக்கு குறைந்தே இருக்கும் எனவே தான் ஆகக்குறைந்தது ஒன்றுவிட்ட ஒரு நாளைக்காவது உடற்பயிற்சி செய்ய வேண்டியது அவசியமாகின்றது.

### உடற்பயிற்சியின் நன்மை

உடற்பயிற்சி- விளையாட்டு நிறையை அதிகரிக்காமல் செயற்படுவதால், பருமன் அதிகரிப்பதால் ஏற்படும் நீரிழிவு, மூட்டு வியாதிகள் (**Osteo arthritis**), முதலியனவும் வராமல் தடுக்க முடியும். முக்கியமாக வயதான காலத்தில் பெண்களுக்குஎலும்புகள் வலுவிழந்து இலகுவாக முறிவடைகின்றன (ஈஸ்ட்ராஜன்) ஓமோன் குறைவது இதற்கு காரணம் ஆனால் இளம் வயதில் உடற்பயிற்சி செய்வது, சுண்ணாம்பு (கல்சியம்)சத்து நிறைந்த உணவு உண்பவர்களுக்குஇந்நிலைமை ஏற்படுவதில்லை. காரணம் அவ்வேளைகளில் சுண்ணாம்புசத்து இறுக்கமாக எலும்புகளில் படிவதனால் பிற்காலத்திலும் இது தாக்குப்பிடிக்கின்றது.

தேகப்பயிற்சியின் போது குருதியோட்டம் மூளைக்கும் நன்றாகச் செல்வதனால் மூளையின் இயக்கமும் ஞாபக சக்தியும் சிறப்பாகஅமைவதும் கண்டறியப்பட்டுள்ளது.

உளரீதியாக நாம்தேகஅப்பியாசத்தை நோக்குகையில் அது இரண்டு கோணங்களில் நலன் பெருக்குவதைக் காணலாம். நல்ல முறையான தேக அப்பியாசம் விளையாட்டுஎன்பவற்றில் ஈடுபடும் பொழுது, உள நெருக்கீடுகள்மறக்கப்படுகின்றன. முழுக்கவனமும்ஒரு சில மணி நேரத்துக்கேனும், இப் பயிற்சியில்இருக்கும், முடிவில், மனம் இலேசாகவும், நெருக்கீடுகளின் தாக்கம் குறைவாக இருப்பதையும் காணலாம். எனவே நெருக்கீடுகள் வியாதியாக மாறுவது தடுக்கப்படுகின்றது, உளநோயாளருக்கும்நோயின் தாக்கத்தைக் குறைப்பதற்கு மருந்துகளுடன், விளையாட்டு, நடனம், தேக அப்பியாசம் முதலியனபயன்தருகின்றன. மூளைக்குச் செல்லும்இரத்தோட்டத்தின் அதிகரிப்பு, சுத்தமான காற்றின் பிராணவாயு, உடல் ரீதியான செயற்பாடுகளின் போது சுரக்கப்படுகின்ற ஓமோன்கள், நொதியங்கள் போன்ற பலவற்றின் செயல்திறன்களே உளரீதியான மேன்மையை உருவாக்குகின்றது.

சமூக ரீதியாகவும் உடற்பயிற்சி, விளையாட்டு மனித தன்மையை மேம்படுத்த உதவுவது காணக்கிடைக்கின்றது. தலைமைத்துவ பண்பு, குழுவாக செயற்படுதல், விட்டுக்கொடுக்கும் தன்மை, மற்றவர் குறைகளை பெரிதுபடுத்தாமல் ஒத்துவாழும் சிறப்பு பிறர் தவறுகளை மன்னித்து மறத்தல் முதலியன குழு விளையாட்டுக்கள் மூலம் மனிதன் கற்கும் பாடங்கள். ஆனால் பணமே எல்லாம் என்றுவாழும் இவ்வுலகில் இப்பண்புகள் தேய்வடைவதையும், விளையாட்டு வீரர் களத்தில்மோத அவர்கள்பெயரைச் சொல்லி வெளியில் நிற்போர் தங்களுக்குள் மோதும் அவலம்இங்கு நிகழ்கின்றது. இவர்கள் சரியான விளையாட்டு வீரர்களாக வளராததையே இது குறிக்கின்றது. ஒருவிளையாட்டு வீரனுக்கு சாதாரணமாக சட்டம், ஒழுங்கு, விதிகள் முதலியவற்றை மதித்து வாழும். பண்பு வளரும். பிறர் நலம், சமூக உறவு விளங்கும். இங்கு நடைபெறும் கோஷ்டி மோதல்களுக்கு இவர்கள் விளையாட்டு வீரர்களாக இருக்காமல் விளையாடத் தெரியாத பார்வையாளராக மட்டுமே இருப்பதுதான் பிரச்சினை. இவர்கள் மற்றவர்களுக்கும் பிரச்சினைக்குரியவர்களாக இருக்கிறார்கள், விளையாட்டு வீரர்களிலும் பெண்களை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தும் மைக்டைசன், டெனிஸ் மட்டையை தோற்றவுடன் உடைத்து சுழற்றி எறிந்து சிறுபிள்ளை கோமாளித் தனம் காட்டும் சில 'வீரர்கள், இவ்வாறான குழு விளையாட்டுகளில் பங்கெடுக்காத, மனநிலை தளம்புபவர்களாக இருக்கின்றார்கள். எனவே தான் உடற் பயிற்சி, விளையாட்டு முதலியவற்றில் குழுவாக இயங்குவது பழகுவது முக்கியத்துவம் பெறுகின்றது.

நாம் நலமாக விளங்க, உடல், உள்ளம் மட்டுமல்லாது, சமூக நிலையிலும் இயங்க வல்லவர்களாக இருக்க வேண்டும். எங்கள் எண்ணங்கள், செய்கைகள் சமூகத்தவரால் ஏற்றுக் கொள்ளத் தக்கவைகளாக பெரியோரால் ''அறம்'' ஒழுக்கம் என்று வலியுறுத்தப் பட்டவைக்கு, அமைவாக இருக்கும் வரை சமூகம் எம்மை ஏற்றுக்கொள்ளும். இவ் எண்ணங்கள் எம்மில் மேலோங்கி இருக்கும் வரை

(-3ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### தேடுதல்

தேடினேன் தினைக்கத்துந் தெண்டனிட்டேன்
சிந்தை நைந்து
வாடினேன் என்மயக்கம் மாற்றாய் பராபரமே

-தாயுமானவர்

தேவே, உன்னைத் தேடிப்பெறுதல் என்பது ஒரு நாளும் ஆகிற காரியமல்ல இத்தனையுமாயுள்ள உன்னை இங்கு இப்பொழுது தெரிந்து கொள்ளுதலே முறை.

உலகனைத்துமாய் வடிவெடுத்திருப்பவர் கடவுள். அவரை இங்குமங்கும் தேடுவது வீண். அவரைக் காணுவதற்கான பான்மையுடையவர் பார்க்குமிடமெங்கும் அவரையே காண்பர். அவரைக்காணஇயலாதார் குருடனுக்கு ஒப்பாவர். குருடன் எங்கு தேடினாலும் சூரிய வெளிச்சத்தைக் காணமுடியாது. ஞானக்கண்ணில்லாதார் தெய்வத்தை எங்குதேடியும் காணமாட்டார். ஞானக்கண்ணுடையார் அவரைத் தேடுவதில்லை. யாண்டும் கடவுளையே காண்கின்றனர்.

- ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்

# யாழ். மனிதநேய ஒன்றியம் மாணவர்களிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தேவையற்ற விடயங்களுக்காக தமக்கிடையே மோதிக்கொண்டு அனர்த்தப்படுவது வேதனையளிப்பதாக யாழ் மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளர் சிவசுப்பிரமணியம் கவலை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் நேற்று செய்திக்குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்த யாழ் பல்கலைக்கழகத்தில் கடந்த சில தினங்களாக நடைபெற்று வருகின்ற சம்பவங்கள் எம்மையெல்லாம் வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

இனத்தின் விடிவிற்காக எம் சமுதாயத்தை வழிநடத்த வேண்டிய மாணவர்கள் சில நடவடிக்கைகளுக்காக மோதிக்கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. மாணவர்கள் மோதிக்கொள்வதைத் தவிர்த்து அனைத்து மாணவர்களும் சகோதரதத்துவத்துடன் இணைந்து தமது கல்வியை முன்னெடுக்குமாறு வேணடுகின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


# இரண்டாவது பிறந்த நாள் வாழ்த்து

11-06-2002

2nd HAPPY BIRTHDAY



செல்வன் அற்புதராஜா அஜீதன்

அற்புதராஜா- அனுலாஜினி தம்பதிகளின்

செல்வப்புதல்வன் அஜீதன்

தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று(11.06.2002) செவ்வாய்க்கிழமை சுவிஸ்லாந்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை சுவசிலுள்ள அப்பா, அம்மா, இராஜேந்திரம் அப்பப்பா, அம்மம்மா பிரசாந் மாமா, சாந்தி சித்தி, சின்னராசா அப்பப்பா, வீஜி குடும்பத்தினர், லண்டன் பிரமிளன் மாமா, கட்டப்பிராய் பாலசுந்தரம் அப்பப்பா, அம்மம்மா, மாமாமார், சித்திமார், சசி மாமா, தங்கா அத்தை, பிருந்தா மச்சாள், சஜீதன் அத்தான் மற்றும், அப்பப்பாமார், அம்மம்மாமார், விளையாட்டு அரங்கு வீதி செல்வநாதன் அப்பப்பா குடும்பத்தினர், கோப்பாய் அப்பம்மா, ரதீசா அத்தை, மாமா, அத்தான், பாலு பெரியப்பா, நடராஜா பெரியப்பா குடும்பத்தினர், ஜேர்மன் உதயன், ஆனந்தன் பெரியப்பா, பெரியம்மா குடும்பத்தினர், கொழும்பு தெய்வேந்திரம் அப்பப்பா குடும்பத்தினர், வவுனியா சந்தனம் தாத்தா, பாட்டி குடும்பத்தினர், அச்சுவேலி அப்பப்பா, அம்மம்மா, ரஞ்சித் அண்ணா, வசாவிளான் அன்பழகன் குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர், அனைவரும் நல்லூரக் கந்தன் அருளால் சகல நலன்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

கட்டப்பிராய் யாழ்ப்பாணம் [5421] யோகநாதன்-ரஞ்சினி



யா/ கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம்

சீரணி சண்டிலிப்பாய்

## பழைய மாணவர் சங்கம் பொதுக் கூட்டம்

காலம்: 16.06.2002 ஞாயிற்றுக்கிழமை

காலை 9.30 மணி


# நிமலராஜன் படுகொலை

## ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் 19பேர் இன்று வாக்குமூலம் அளிப்பர்

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகளுக்கு ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் 19 பேரை இன்று யாழ் பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் அளிக்குமாறு யாழ் மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

யாழ் மாவட்டத்தில் உள்ள ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் 19 பேரின் விபரத்தை அக்கட்சியின் யாழ் மாவட்ட பிரதி அமைப்பாளர் க.மணிபல்லவராஜன் நீதிமன்றில் சமர்ப்பித்ததன் பிரகாரம் அவர்கள் அனைவரையும் இன்று வாக்குமூலம் அளிக்க யாழ் பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பி வைக்குமாறு நீதிபதி ஈ.பி.டி.பி யாழ் மாவட்ட தலைமைக் காரியாலயத்துக்கு உத்தரவிட்டுள்ளார். (இ-10-43)

### தனியார் தொலைபேசி...

விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இசம்பவத்தில் ஞானம் தொலைத்தொடர்பு நிலையத்தின் உரிமையாளரான கலைப்பீட மாணவனும் ஈடுபட்டார் எனவும் அதற்குப் பழி வாங்கும் நடவடிக்கையாகவே பிரஸ்தாப தொலைத்தொடர்பு நிலையம் விஞ்ஞான பீட மாணவர்களால் அடித்து நொருக்கப்பட்டதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்றைய தினம் இச்சம்பம் இடம் பெற்ற போது மாணவர்கள் வாள்கள், மற்றும் கத்தி பொல்லுகளுடன் காணப்பட்டதையும் நிலையத்தைத் தாக்கியவர்கள் துணியால் தமது வாயை மூடிக்கட்டியிருந்ததையும் காண முடிந்தது.

மாணவர்களின் மோதல் நேற்றும் தணியாத காரணத்தால் பொலிஸார் பல்கலைக்கழக வளாகத்தில் நிறுத்தப்பட்டுள்ளனர். (ந-9-211-226)

### ஈ.பி.டி.பி...

நாளை புதன்கிழமைக்குள் கைது செய்யுமாறு நீதிபதி இ.த. விக்னராஜா சீ.ஐ.டி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (இ-10)

## 2வது விசேட விமான சேவை இன்று இல்லை

(யாழ்ப்பாணம்)

நாளை நடைபெறவிருந்த எக்ஸ்போ விமான சேவையின் 2வது விசேட பயணசேவை நடைபெறமாட்டாது.

இதில் பயணம் செயவதற்கு பயணச்சீட்டுப் பெற்றவர்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ள 2வது விமான சேவையில் பயணம் செய்ய முடியும் என அறிவிககப்பட்டுள்ளது. (த)

### பிரபாவை ...

நுண்கலைப் பீடம ஆகியவை வழமைபோல் இயங்கும் என்றும் துணைவேந்தர் மேலும் அறிவித்துள்ளார்.

கடந்த 7ம் திகதி பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் ஆண்கள் விடுதிக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியதும் அதனை அடுத்து விஞ்ஞான பீட மாணவர் பொது அறை தாக்கப்பட்டுதும் தொடர்ந்து மாணவர்களிடையே பதற்றம் நிலவுவதையும் அடுத்து மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (வ)

### சக்கோட்டையில் ...

நிலவும் இவ்வேளையில் படையினரின் இத்தகைய நடவடிக்கைகள் தமது குடியிருப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (இ-23)






## ஹர்த்தாலுக்கு ஆதரவளிக்க யாழ் வணிகர் கழகம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு வழங்குமாறு யாழ் வணிகர் கழகம் யாழ் வர்த்தகர்களை கேட்டுள்ளது.

ஹர்த்தால் தினமான நாளை புதன் கிழமை வர்த்தக நிறுவனங்களை மூடி குடாநாடு தழுவிய ஆதரவை வெளிக்காட்டுமாறு வணிகர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (த)

### பிரபாவை ...

விக்கிரமசிங்காவை வலியுறுத்த வேண்டுமென்றும் இவ்விடயம் குறித்து தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை நினைவூட்டுமாறும் அக் கடிதத்தில்சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-9)


யாழ்ப்பாண பல்கலைக் கழகம்
இலங்கை

## மாணவர்களுக்கானஅறிவித்தல்

பின்வரும் பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு நேற்றிலிருந்து (10.06.2002) பல்கலைக்கழக வளவினுள் பிரவேசிப்பதற்கும் விடுதிகளில் தங்குவதற்கும் மறுஅறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

1. கலைப்பீடம் (இராமநாதன் நுண்கலைக்கழகம் நீங்கலாக)
2. விஞ்ஞான பீடம்
3. முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம்

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
10.06.2002 (C/4404)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
இரண்டாம் வருட நிறைவை முன்னிட்டு நடாத்தப்படும்

**காலம்:** 16.06.2002 ஞாயிற்றுக்கிழமை

காலை 9.30 மணி

**இடம்:** பாடசாலை மண்டபம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

குறிப்பு – சகல பழைய மாணவர்களும் தவறாது சமூகம் தரவும். புதிய அங்கத்தவர்களும் இணைந்து கொள்ளலாம்.

(5424) பழைய மாணவர் சங்கம்



சிவமயம்

## சைவபரிபாலன சபை – யாழ்ப்பாணம்

### சைவசமய பாடக் கருத்தரங்கு - தீவகம்

வேலணை சேர் வைத்தியலிங்கம் துரை சுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் நாளை (12. 06. 2002) புதன்கிழமை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சைவ சமய பாடக் கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தினால் 13. 06. 2002 வியாழக்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளது. அனைத்து சைவ சமய பாட ஆசிரியர்களையும் 13. 06. 2002 அன்று சமுகம் கொடுக்குமாறு அன்பாக வேண்டுகின்றேன்.

சைவப் புலவர் வ.கந்தசாமி
பரீட்சை செயலாளர்

சைவபரிபாலனசபை
யாழ்ப்பாணம்

(C/4403)



## சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான நல்லெண்ணெய்




# V.S.P.லஞ்ஒயில்




தயாரிப்பாளர்:

## பரிமளா ஸ்ரோர்ஸ்

26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

[C/4243]



# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி இரண்டாம் வருட நிறைவை முன்னிட்டு நடாத்தப்படும் மாபெரும் கல்வியியற் கண்காட்சியும்

# சாகஸ நிகழ்வும்



இடம்:- கல்லூரி மைதானம்
காலம்:-யூன் 17 தொடக்கம் 20 வரை தினமும்
நேரம்:- காலை 8.30 மணி தொடக்கம்
மாலை 4.30 மணி வரை

கல்வியியற் கண்காட்சி உட்பிரவேசம் - ரூபா 5

- யாழ்ப்பாண வலயப்பாடசாலைகள்:-17.06.2002
- வலிகாம வலயப்பாடசாலைகள்:- 18.06.2002
- வடமராட்சி வலயப்பாடசாலைகள்:-19.06.2002
- தென்மராட்சி, தீவகப் பாடசாலைகள்:- 20.06.2002

கண்காட்சியைப் பார்வையிடும் பாடசாலைகள் மேற்குறிப்பிட்ட திகதிகளில் முன்னனுமதியினை பெற்று பங்கு கொள்ளுமாறு பணிவாக வேண்டுகின்றோம்.

கடந்த இரு தசாப்தங்களின் பின் யாழ்ப்பாண மண்ணில் முதல் முறையாக
ஆண், பெண் இருசாராரும் ஒரே நேரத்தில் பங்கு கொள்ளும்
மயிர்க்கூச்செறியும்



- பாதாளக் கிணற்றுக்குள் பயங்கர மோட்டார் சைக்கிள் ஓட்டம்
- பாதாளக் கிணற்றுக்குள் சைக்கிள் ஓட்டம்
- **Merry - Go - Round**
(தென்பகுதியிலிருந்து விசேடமாகத் தருவிக்கப்பட்டது)



அரிய சந்தர்ப்பம்! நழுவ விடாதீர்கள்
வாருங்கள்!கண்டு மகிழுங்கள்.

உட்பிரவேசம்:~
பாடசாலை மாணவர்களுக்கு - ரூபா 20.00
ஏனையோருக்கு ரூபா 40.00 (அனுமதி மாலை 2.00 மணியின் பின்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினர்

[C/4402]



இப்பத்திரிகை வலம்புரி அச்சு ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.06.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.